ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1921/5 - 2015 ජූනි මස 29 වැනි සඳුදා - 2015.06.29
1921/5 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**மத்திய மாகாணத்தின் மாகாண சபை**

*2014 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, மத்திய மாகாணத்தின் மாகாண சபையின்
பொருட்கள் அடகு பிடிப்பவர்களுக்கான நியதிச் சட்டம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாண மாகாண சபையால் 2015, ஏப்பிறல் 07 ஆந் திகதியன்று உறுதி செய்யப்பட்ட 2015, மே 20 ஆந் திகதி மாண்புமிகு ஆளுநர் அவர்களால் அங்கீகாரம் செய்யப்பட்ட மேலே குறிப்பிடப்பட்ட நியதிச் சட்டத்தை எல்லோரும் அறிந்துகொள்ளுவதற்கு இத்தால் பிரசுரிக்கின்றேன்.

சரத் ஏக்கநாயக்க,
முதலமைச்சரும், நிதி மற்றும் திட்டமிடல்,
நீதி, சமாதானம், உள்நாட்டு அலுவல்கள் மற்றும் மாகாண நிர்வாகம்,
மனிதவலு, கல்வி, கலாசார நடவடிக்கைகள், சுற்றுலாத்துறை, காணி, கூட்டுறவு
அபிவிருத்தி, வர்த்தக, வாணிப, உணவு வழங்கல் மற்றும் விநியோகம்,
முதலீட்டு ஒருங்கமைப்பு அமைச்சரும்,
மத்திய மாகாண மாகாண சபை.

முதலமைச்சர் அலுவலகம்,
மத்திய மாகாண மாகாண சபை,
கண்டி,
2015, யூன் 03.

**மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் 2014 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க,
பொருட்கள் அடகு பிடிப்பவர்களுக்கான நியதிச்சட்டம்**

இது மத்திய மாகாணத்துக்குள் வங்கி ஒன்றின் மூலம் நடாத்திச் செல்லப்படும் பொருள் அடகு பிடிக்கும் தொழில்கள் அல்லாத பொருள் அடகு பிடிக்கும் தொழிற்துறைகளைப் பதிவு செய்வதற்காகவும், அவைகளுடன் சார்ந்த தொடர்புகளைக் கொண்ட ஏனைய விடயங்களுக்காகவும் ஏற்பாடுகளை ஆக்கிக் கொடுப்பதற்கு மத்திய மாகாண இறைவரி ஆணையாளருக்கு அதிகாரங்களைப் பெற்றுக்கொடுக்கும் ஒரு நியதிச் சட்டமாகும். இந்நியதிச் சட்டம் 1942 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பொருட்கள் அடகு பிடிப்பவர்களுக்கான கட்டளைச் சட்டத்திற்கு அமைவானது ஆகும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாணத்தின் மாகாண சபையினால் இவ்வாறு விதிக்கப்படுகின்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*அத்தியாயம் I*

## பொது

குறுகிய பெயரும். நடைமுறைத் திகதியும்.

1. இந்நியதிச் சட்டம் மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் 2014 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, பொருட்கள் அடகு பிடிப்பவர்களுக்கான நியதிச் சட்டமென அறிமுகம் செய்யப்படுவதுடன், மத்திய மாகாணத்தின் ஆளுநர் அவர்களது அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற நாள் முதல் செயற்பாட்டுக்கு வரும்.

*அத்தியாயம் II*

## பொருள் அடகுபிடிப்போர்

பொருள் அடகு பிடிப்பவர்.

2. (1) பொருள் அடகுபிடிப்பவர்.

அரச நிதி மசோதாவிற்கமையப் பதிவு செய்யப்பட்ட வங்கியொன்று அல்லாத பொருள் அடகு பிடிக்கும் நபர் ஒருவர் ஏதாவது நிபந்தனையின் கீழ், பின்னர் விடுவிக்கப்படும் என அல்லது விலைக்கு வாங்கப்படும் என வெளியிடப்பட்டதும் அல்லது மறைமுகமான உடன்பாடொன்றுக்கு அல்லது ஏற்றுக்கொள்ளப்படல் ஒன்று உண்டு என அல்லது நியாயபூர்வமான மறைமுக உடன்பாடொன்றை ஏற்றுக் கொண்டு அல்லது அதற்கமைய பொருட்களை விலைக்கு வாங்குதல் அல்லது விற்பனைக்காக வழங்கப்படும் முற்பணத்துக்குப் பிணையாகப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கென வர்த்தக நிலையமொன்றை நடாத்திச் சென்று பொருட்களை விலைக்கு வாங்கி அல்லது வைத்துக் கொண்டு அவற்றிற்காக ஏதாவதொரு பணத்தொகையைச் செலுத்தும் அல்லது முற்பணமாகப் பணம் வழங்கும் அல்லது கடனுக்கு வழங்கும் எவரேனும் ஒரு நபர் அல்லது ஒரு நிறுவனம், ஒரு கூட்டு வர்த்தகம், வரையறுக்கப்பட்ட கம்பனி என்ற கருத்துறும்.

பொருள் அடகு பிடிப்பவருடைய வர்த்தகங்களைச் செய்தல் ஒரு சிலருக்கு தடையாகும்.

(2) யாராவது ஒரு நபர்.

(i) இலங்கை பிரசை அல்லாத ஒரு நபரானால் ; அல்லது

(ii) வெளிநாட்டுக் கம்பனி ஒன்றானால் ; அல்லது

(iii) வெளிநாட்டு வர்த்தக நிறுவனமொன்றானால் உரிய தினத்தில் அல்லது அதற்குப் பின் அந்நபரினால் அடகு பிடிக்கும் வர்த்தகங்கள் செய்யப்படலாகாது. இதற்கமைய இவ்வாறான வர்த்தகங்களைச் செய்வதானால் அந்நபருக்கு, வெளிநாட்டு கம்பனிக்கு அல்லது வெளிநாட்டு வர்த்தக நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதும், உரிய திகதிக்கு முன்னிருந்த நாட்களில் செல்லுபடியானதுமான ஏதாவதொரு அனுமதிப்பத்திரமொன்று இருப்பின் அத்தினம் முதல் அல்லது அதன் பின் அவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகக் கருதி சகல பணிகளின் போதும் கணித்துச் செயல்படல் வேண்டும்.

*அத்தியாயம் III*

## பதிவு செய்தல்

வர்த்தகத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் பதிவு செய்யப்படல் வேண்டும்.

3. (1) இந்நியதிச் சட்டத்தின் கீழ் அடகுபிடிக்கும் அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் நபர் தமது வர்த்தகத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் அதனைப் பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பித்து மத்திய மாகாண இறைவரி ஆணையாளர் அவர்களிடம் அதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். இதுவரை நடாத்தப்பட்டுவரும் வர்த்தகங்கள் 62 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாகும்.

இதன் பின்னர் IV ஆம் அத்தியாயத்தில் "அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளுதல்" என்பதன் கீழ் ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளவைகளுக்கமைய அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணபித்தல் முதல் வேண்டுகோள் என்பதும், அவ்வர்த்தகத்தை நடாத்திச் செல்வதற்கான முதற் பதிவு என கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

IV ஆம் அத்தியாயம்

## அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்படல்

பொருள் அடகு பிடிப்பவர் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

4. (1) பொருள் அடகு பிடிக்கும் வர்த்தகமொன்றை இயக்கும் சகல வர்த்தக நிலையங்களும் அல்லது கிளைகளும் அவ்வாறான சகல வர்த்தக நிறுவனங்களும் இறைவரி ஆணையாளர் அவர்களிடம் வெவ்வேறாக வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் ஒன்று இன்றி எந்தவொரு நபரும் அடகுபிடிக்கும் வர்த்தகமொன்றை அல்லது கூட்டு வர்த்தகமொன்றை நடாத்திச் செல்லல் ஆகாது.

(2) மேற்குறித்த முதலாம் உபவாசகத்தின் கீழ் வழங்கப்படும் சகல அனுமதிப்பத்திரங்களும் இங்கு (1) ஆம் அட்டவணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள "அ" படிவத்தை ஒத்ததாக அமைதல் வேண்டும்.

(3) மேற்குறித்த (1) ஆம் உபவாசகத்தின் கீழ் வழங்கப்படும் சகல அனுமதிப்பத்திரங்களும் அங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ள வர்த்தக முயற்சிக்கு, ஒரு பஞ்சாங்க வருட காலத்திற்கு மட்டும் செல்லுபடியாகும்.

5. மேற்குறித்த (1) ஆம் உபவாசகத்தின் கீழ் வழங்கப்படும் சகல அனுமதிப்பத்திரங்களதும் ஒரு பிரதி உரிய அனுமதிப்பத்திரத்திற்கமைய அடகு பிடிக்கும் வர்த்தகம் நடாத்திச் செல்லப்படும் பிரதேசத்திற்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகருக்கு இறைவரி ஆணையாளர் அவர்களினால் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அனுமதிப்பத்திரத்தின் பிரதியொன்று பொலிஸ் அத்தியட்சகருக்கு அனுப்பிவைக்கப்படல்.

6. இங்கு 4 (1) ஆம் உபவாசகத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரமொன்று ஏதாவதொரு அடகு வர்த்தகத்திற்கு உட்படுமாயின் அவ் அனுமதிப்பத்திரதாரியினால் அவ் அனுமதிப்பத்திரத்தை வேறெந்தவொரு நபருக்கும் கைமாற்றம் செய்தலாகாது. மேலும், வேறு எந்தவொரு நபரும் இறைவரி ஆணையாளரது அனுமதியில்லாமல் அனுமதிப்பத்திரத்தை கைமாற்றம் செய்தல் வெறுமையானதும் அதிகாரம் அற்றதாகவும் கணிக்கப்படும். மாகாண இறைவரி ஆணையாளருடைய முன் அனுமதியின்றி அனுமதிப்பத்திரம் ஒப்படைத்தல்.

7. ஏதாவது ஒரு சட்டவிரோதச் செயலொன்று அல்லது நீதிக்கு முரணான செயலொன்றும் செய்யப்படவில்லை என அல்லது அவ்வாறான ஏதாவதொரு குற்றத்திற்கு குற்றவாளியாகவில்லை என சத்தியக்கடதாசி ஒன்றின் மூலம் உறுதியொன்று மாகாண இறைவரி ஆணையாளரிடம் வழங்கப்பட்டாலன்றி, நபருக்கு பொருள் அடகுபிடிக்கும் வர்த்தகமொன்றை நடாத்துவதற்கான அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ளவும், வழங்குவதற்கும் உரிமையில்லை. ஆரம்ப அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள உரிமை உடையோர்.

8. (1) ஏதாவதொரு சூழலில் உள்ள பொருள் அடகுபிடிக்கும் வர்த்தகமொன்றை நடாத்திச் செல்வதற்கு அனுமதிப்பத்திரமொன்றை பெற்றுக்கொள்வதற்காக எதிர்பார்க்கும் சகல நபர்களும், அனுமதிப்பத்திரம் ஒன்றுக்கு விண்ணப்பித்தல்.

(அ) தான் சட்டத்திற்கு முரணான அல்லது சட்டத்திற்கு மாறான செயற்பாடுகளில் ஈடுபடவில்லை அல்லது அவ்வாறான செயலொன்றுக்கு குற்றவாளியாக்கப்படவில்லை என சத்தியக்கடதாசி ஒன்றையும் ;

(ஆ) இந்நியதிச் சட்டத்தின் 44 (1) ஆம் வாசக ஏற்பாடுகளுக்கு அமைய தயாரிக்கப்பட்ட நிரூபித்தல் பத்திரமொன்றையும் ;

(இ) வர்த்தக நாமம் பதிவு செய்யப்படும், கூட்டு வர்த்தக ஒப்பந்தம், வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றாகப் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ்களுடன் விண்ணப்பப்படிவமொன்றையும் இறைவரி ஆணையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும் ;

(ஈ) பொருள் அடகு பிடிப்பவரின் பெயரில், பொருள் அடகுபிடிக்கும் இடம் ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கை அல்லது அதன் கிளைகள் ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கையில் நடாத்திச் செல்லப்படுமாயின் அவ்வாறான இடங்களுக்கும் கிளைகளுக்கும் இறைவரி ஆணையாளரால் நிச்சயிக்கப்படும் வெவ்வேறான மாதிரிப்படிவங்களுக்கு அமைவுற்ற படிவமொன்றை இறைவரி ஆணையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) அனுமதிப்பத்திரதாரி ஒருவரால் நடாத்திச் செல்லப்படும் அடகு வர்த்தகத்திற்குரிய பஞ்சாங்க வருட அனுமதிப்பத்திரமொன்றை பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பப்படிவம் செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் இரத்தாகும் திகதிக்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(3) அடகுபிடிக்கும் வர்த்தகமொன்றை நடாத்திச் செல்வதற்காக உரிய அனுமதிப்பத்திரத்திற்கான முதல் விண்ணப்பமானது அவ் அடகு வர்த்தகத்தை நடாத்திச் செல்வதற்கான பதிவாகும் என்பதோடு, அதற்காக அமைச்சர் அவர்களினால் விதிக்கப்பட்டு வர்த்தமானியில் காலத்திற்குக்காலம் நிச்சயிக்கப்படும் கட்டணமொன்றை பதிவுக் கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும். இதற்கு மேலதிகமாக 10 (2) ஆம் உபவாசகத்தின் கீழ் நிச்சயிக்கப்பட்டுள்ள பணத்தொகையொன்றும் , 10 (3) ஆம் உபவாசகத்தின் ஏற்பாடுகளின்கீழ் வைப்புச் செய்யப்படல் வேண்டும்.

(4) வருடாந்த அனுமதிப்பத்திரத்தை உரிய திகதிக்கு முன் புதுப்பிக்காமல் அடகு பிடிக்கும் வர்த்தகமொன்று நடாத்திச் செல்லப்படுமாயின் அவ்வாறானவர்களுக்கு அடகுபிடிக்கும் அனுமதிப்பத்திரமொன்று வழங்குவதற்கு, அனுமதிப்பத்திரமின்றி அடகு பிடிக்கும் வர்த்தகம்

செய்யப்பட்ட சகல வருடங்களுக்குமான அனுமதிப்பத்திரக் கட்டணங்களும் அனுமதிப்பத்திரமின்றி வர்த்தகம் செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு மாதங்களுக்கும் உரிய அனுமதிப்பத்திரக் கட்டணத்தின் 10% மாதக் கட்டணமாக அறவிடப்படல் வேண்டும்.

(5) வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணம் பெற்றுக்கொள்ளப்படாமை பொருள் அடகுபிடிக்கும் வர்த்தகமொன்றை நடாத்திச் செல்ல அடகு பிடிப்பவர் ஒருவருக்கு வருடாந்த அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதாயின், அனுமதிப்பத்திரங்களின்றி பொருள் அடகுபிடிக்கும் வியாபாரங்கள் செய்த சகல வருடங்களுக்கும் அனுமதிப்பத்திர கட்டணங்களின்றி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்படாத சகல மாதங்களுக்கும் உரிய அனுமதிப்பத்திர கட்டணத்தின் 50% தாமதக் கட்டணங்களாக அறவிடப்படல் வேண்டும்.

(6) விண்ணப்பதாரி அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக இந்நியதிச் சட்டத்திற்கும் அவற்றின் கீழுள்ள நிபந்தனைகளுக்குரிய தேவைகளைப் பூர்த்தி செய்திருந்தால், அல்லது உரிய தகைமைகள் இருந்தால் இறைவரி ஆணையாளர் அவர்களினால் அனுமதிப்பத்திரம் வழங்குதல் மறுக்கப்படலாகாது.

(7) யாராவது ஒரு நபர் பொருள் அடகு பிடிக்கும் வர்த்தகமொன்றை நடாத்துவதற்கான அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பிக்கும் பட்சத்தில், அவ் அனுமதிப்பத்திரம் வழங்கப்படாமைக்குரிய தீர்மானங்களைக் காரணங்களுடன் சுட்டிக்காட்டி, 30 நாட்களுக்கு முன்னர் இறைவரி ஆணையாளர் அவர்கள் விண்ணப்பதாரிக்கு அறிவித்தல் வேண்டும்.

(8) மேற்குறித்த 8 (4) மற்றும் 8 (5) ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களைச் செயற்படுத்தும்போது வர்த்தகத்தை நடத்திச் செல்பவருக்கு ஏற்படும் நேர்மையீனமான செயல்கள் பற்றி ஆணையாளருக்கு 14 நாட்களுக்குள் எழுத்துமூலம் தெரிவிக்க முடியும். ஆணையாளர் அவர்களின் கருத்து இறுதியானதாகும்.

அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்றுக் கொள்ளும் போது வருடாந்த கணக்கு கள் சமர்ப்பிக்கப் படல்.

9. ஏதாவதொரு பஞ்சாங்க வருடத்திற்கு அனுமதிப்பத்திரமொன்றைக் கேட்கும் பொருள் அடகுபிடிப்பவர் ஒருவர் தமது பொருள் அடகு வியாபாரத்திற்குரிய கிட்டிய நிதியாண்டின் வருடாந்த வருமானக் கணக்குகளை ஆணையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஒரு சிலருக்கு அனுமதிப்பத்திரம் வழங்குதல் தடை.

10. (1) இந்த நியதிச் சட்டத்தின் (2) ஆவது உபவாசத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் மூலம் பொருள் அடகு பிடிப்பவருடைய வர்த்தகம் நடாத்திச் செல்லுதல் தடையாகும். யாதாவதொரு நபருக்கு பொருள் அடகுபிடிக்கும் வர்த்தகத்தை தொடர்ந்தும் செய்வதற்கு அனுமதிப்பத்திரமொன்று உரிய தினத்திற்கு அல்லது அதற்குப்பின் வழங்கப்படலாகாது. காலதாமதக் குறைபாடுகள் காரணமாக அல்லது அவ்வாறானதொரு நபருக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரமொன்று இதற்கமைய செல்லுபடியற்றதாகவும், செல்லுபடியற்றவையாக சகல பணிகளின் போதும் கணிக்கப்படல் வேண்டும்.

அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு முன் பிணைப் பணம் வைக்கப் படல்.

(2) வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் ஒன்றுக்கு அறவிடப்பட வேண்டிய வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணமும் அனுமதிப்பத்திரதாரியினால் வைப்புச் செய்யப்படவேண்டிய பிணைப் பணமும் வைப்புச் செய்யப்படும் விதங்கள் பற்றி அமைச்சர் அவர்களினால் காலத்திற்குக்காலம் நிச்சயிக்கப்பட்டு வர்த்தமானியில் அறிவிக்கப்படும்.

அனுமதிப்பத்திர மொன்று வழங்கு தலை மறுத்தல்.

(3) இறைவரி ஆணையாளர் அவர்களினால் வைப்புச் செய்யும்படி அனுமதிப்பத்திரதாரிக்கு அறிவிக்கப்படும் பிணைப் பணத்தை இறைவரி ஆணையாளர் பெயரில், தேசிய சேமிப்பு வங்கி சேமிப்புக் கணக்கு ஒன்றில் வைப்புச் செய்யப்படுவதுடன், வர்த்தகத்தை மூடும் அல்லது கைமாறும் சந்தர்ப்பங்களைத் தவிர்ந்த நிலைமைகளில் வைப்புப் பணம் அல்லது அதற்குரிய வட்டிப் பணம் வைப்புச் செய்தவருக்கு மீண்டும் கையளிக்கப்படலாகாது. எனினும் அனுமதிப்பத்திரதாரியினால் பொருள் அடகு வைத்தவருக்கு அல்லது அடகு வைப்பவர்களுக்கு ஏதாவதொரு பணத்தொகை கொடுக்க வேண்டி ஏற்படின் அப்பணத்தொகை வைப்புப் பணத்திலிருந்து அல்லது வட்டிப் பணத்திலிருந்து குறைத்துக் கொள்ளப்படல் வேண்டும்.

11. (1) (அ) யாராவது ஒரு நபர் பொருள் அடகு பிடிக்கும் வர்த்தகம் ஒன்றைச் செய்வதற்காக அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்கும்படி விண்ணப்பிக்கும் திகதிக்கு முன்னர் தொடர் 5 வருட காலத்திற்குள் தண்டனை விதிக்கோவையின் (XI), (XIII), (XVII) அல்லது (XVIII) ஆம் அத்தியாயத்தின் கீழ் அல்லது அந்நியதிச் சட்டத்தின் நடைமுறைகளின் கீழ் தண்டனை வழங்கக்கூடிய ஏதாவதொரு குற்றத்திற்கு குற்றவாளியாக்கப்பட்டிருந்தாலும் ; அல்லது

(ஆ) யாராவது ஒரு நபருக்கு அந்நியதிச் சட்டத்தின் கீழ் அல்லது அடகு வைப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரமொன்று இந்நியதிச் சட்டத்தின் 12 ஆம் வாசகத்திற்கு அமைய செல்லுபடியற்றதாக ஆக்கப்பட்டிருந்தாலும் ; அல்லது

(இ) 13 (2) ஆம் வாசகத்திற்கு அமைய அரச வர்த்தமானியில் பெயர் வெளியிடப்பட்ட ஒருவராக இருந்தாலும் ; அல்லது

(ஈ) 9 ஆம் வாசகத்தின் வருடாந்த கணக்குகள் வெளியிடப்பட்டிருந்தாலும் ; அல்லது

(உ) 8 ஆம் வாசகத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய சமர்ப்பிக்கப்படவேண்டிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாவிட்டாலும் ; அல்லது

(ஊ) ஏல விற்பனையாளர் ஒருவரானால் அல்லது அவ்வாறான ஒருவருக்கு பொருள் அடகு பிடிப்பவருடைய வர்த்தகம் செய்யும் அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்படலாகாது.

!. (1) 4 ஆம் வாசகத்திற்குக் கீழ் அனுமதிப்பத்திரமுடைய ஒரு நபர் அவ் அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் காலத்திற்குள் பொருள் அடகு பிடிப்பவர் என்ற முறையில் தமது வர்த்தகம் தொடர்பாக இந்நியதிச் சட்டம் அல்லது இந்நியதிச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு மாறாக நடந்துள்ளார் என இறைவரி ஆணையாளர் கருதும் பட்சத்தில் அவ் அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்யலாம். அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படல்.

எனினும், அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படுவதற்கு முன்னர் அனுமதிப்பத்திரதாரிக்கு அது பற்றி அறிவிக்கப்படுவதுடன், அதற்கு எதிரான காரணங்களை எடுத்துக்கூற 2 வாரகால அவகாசம் பெற்றுக்கொடுக்கப்படல் வேண்டும்.

(2) மாகாண இறைவரி ஆணையாளரின் தீர்மானத்துடன் திருப்தியடையாத பட்சத்தில் அத்தீர்மானங்கள் பற்றி ஒரு மாத காலத்திற்குள் பிரதம செயலாளருக்கு மேன்முறையீடு செய்யப்படலாம். இது பற்றிய தமது தீர்மானத்தை பிரதம செயலாளர் மூன்று மாத காலத்திற்குள் மேன் முறையீட்டு செய்தவருக்கு அறிவித்தல் வேண்டும்.

(3) பொருள் அடகு பிடித்தவர் அல்லது அவர் இல்லாத சந்தர்ப்பங்களில் அவருடைய ஊழியர் அல்லது பிரதிநிதி ஒருவர் இந்நியதிச் சட்டத்திற்குக் கீழ் ஏதாவதொரு குற்றம் தொடர்பாக அல்லது அவரது வியாபாரத்தில் செய்யப்பட்டதொரு மோசடி தொடர்பாக அல்லது களவாடப்பட்ட பொருள் என தெரிந்தும் களவாடப்பட்ட பொருளை வாங்கியதன் காரணமாக அல்லது குற்றவாளியாக்கப்பட்டால், இறைவரி ஆணையாளர் அப்பொருள் அடகு பிடிப்பவருடைய அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்தல் வேண்டும்.

(4) 4 ஆம் வாசகத்தின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்றை உடைய ஒரு நபர் அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் கால எல்லைக்குள் பொருள் அடகுபிடிப்பவர் என்ற முறையில் தமது வர்த்தகம் தொடர்பான இந்நியதிச் சட்டம் அல்லது இந்நியதிச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் ஒன்றை மீறி நடந்துள்ளார் என இறைவரி ஆணையாளர் கருதும் பட்சத்தில் அவ் அனுமதிப்பத்திரத்தை இடைநிறுத்தும் அதிகாரம் ஆணையாளர் அவர்களுக்கு உரித்தாகும்.

13. (i) ஆண்டுதோறும் அனுமதிப்பத்திரதாரி பொருள் அடகுபிடிப்பவருடைய பெயர், வர்த்தகப் பெயர், அவ்வர்த்தகம் நடாத்திச் செல்லப்படும் இடத்தின் முகவரிகளையும் ; அனுமதிப்பத்திர தாரியுடைய பெயர், முகவரி வர்த்த மானப் பத்திரிகை களில் பிரசித்தப் படுத்தல்.

(ii) மேலே 33 ஆம் வாசகத்தின் கீழ் குற்றவாளியாக்கப்படும் சகல சந்தர்ப்பங்களிலும் அந்நபரின் பெயர், தனிப்பட்ட முகவரி, வர்த்தகத்தின் பெயர், வர்த்தகம் செய்யப்படும் இடத்தின் முகவரி, யாராவது ஒரு அனுமதிப்பத்திரதாரியுடைய அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் காலம் கடந்திருப்பின், தொடர் ஆண்டுக்குரிய அனுமதிப்பத்திரம் வழங்கப்படாமல் இருந்தாலும் அல்லது இறைவரி ஆணையாளர் அது பற்றிய அரச வர்த்தமானியிலும் தினசரிப் பத்திரிகைகளிலும் சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் அறிவித்தலொன்று வெளியிடுதல் வேண்டும்.

## அத்தியாயம் V

## அனுமதிப்பத்திரதாரியினால் கடைபிடிக்கப்பட வேண்டிய நிபந்தனைகள்

பொருள் அடகு பிடிப்பவர் இலங்கையை விட்டு வெளியே செல்லின் அதுபற்றி அறிவித்தல்.

14. 3 மாத காலத்திற்கு அப்பால் இலங்கையை விட்டு வெளியே இருப்பதற்கு கருதப்படும் சகல அடகுபிடிப்போரும்,

(அ) அவ்வாறு வெளியில் செல்லுதல் பற்றி மாகாண இறைவரி ஆணையாளர் அவர்களுக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும் ; மேலும்

(ஆ) தான் இலங்கையிலிருந்து வெளியிலிருக்கும் காலத்திற்குள் பொருள் அடகுபிடிக்கும் தனது வர்த்தகப் பணிகளைத் தொடர்ந்து செய்வதற்காகவும் தனக்குப் பதிலாகச் செயற்படவும், பொருள் அடகுபிடிக்கும் வர்த்தகத்தைத் தொடர்ந்து செய்வதற்காகவும் இந்நியதிச் சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரமொன்றை பெற்றுக்கொள்வதற்கு ஒருவருடைய பெயரைக் குறிப்பிட்டு அது பற்றி மாகாண இறைவரி ஆணையாளர் அவர்களுடைய எழுத்துமூல அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும் ;

வர்த்தகப் பணி நேரங்கள்.

15. பொருள் அடகுபிடிக்கும் வர்த்தகத்தைச் செய்யும் சகல நபர்களும் முற்பகல் 8.00 மணிக்கு முன் அல்லது பிற்பகல் 8.00 மணிக்குப் பின் பொருள் அடகுபிடித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடலாகாது.

பொருள் அடகு பிடிப்பவர் ஏல விற்பனையாளராக செயற்படலாகாது.

16. பொருள் அடகுபிடிக்கும் வர்த்தகங்களைச் செய்யும் எந்தவொரு நபரும் ஏலவிற்பனையாளர் ஒருவராக அல்லது ஏலவிற்பனை வர்த்தகமொன்றைச் செய்தல் கூடாது.

அடகு பிடிப்பவர் அறிவித்தலை பார்வைக்கு வைத்தல்.

17. சகல அடகு பிடிப்பவர்களாலும்,

(அ) தனது வர்த்தக நிலையத்திற்கு முன் கதவுக்கு மேல் தெளிவான எழுத்துக்களில் தனது வர்த்தகத்தின் பெயர்,பொருள் அடகுபிடிப்பவராக பதிவு செய்யப்பட்ட அனுமதிப்பத்திர இலக்கம், அடகு பிடிக்கப்படும் இடம், என்ற சொற்களை சிங்கள, தமிழ், ஆங்கில மும்மொழிகளிலும் எழுதி பார்வைக்கு வைத்தல் வேண்டும் ;

(ஆ) தனது வர்த்தக நிலைத்திற்கு சமுகந்தரும் சகலரும் பார்வையிடக்கூடிய விதத்திலும், சகலரும் வாசிக்கக்கூடிய விதத்திலும் இங்கு 2 ஆம் அட்டவணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விபரங்களையுடைய அறிவித்தல் ஒன்றை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் இவ்வர்த்தக நிலையங்களில் தெளிவாகப் பார்வையிடக்கூடிய விதத்தில் காட்சிப்படுத்துதல் வேண்டும் ;

விபரங்களைப் புகுத்துவதற்குப் பயன்படுத்த வேண்டிய மொழிகள்.

18. பொருள் அடகு பிடிக்கும் வர்த்தகத்தைச் செய்யும் எந்தவொரு நபரும் ஏதாவதொரு புத்தகம் ஒன்று, படிவம் ஒன்று, ஆவணம் ஒன்றைப் புகுத்துவதற்காக இந்நியதிச் சட்டத்தில் நிச்சயிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் இவ்விபரங்களை சிங்களம், தமிழ், ஆங்கில மும்மொழிகளிலும் உரிய ஆவணங்களில் புகுத்துதல் வேண்டும்.

அடகு பிடிப்பவரினால் பேணப்படும் ஏடுகள்.

19. இங்கு (1) ஆம் அட்டவணையில் சுட்டிக்காட்டிய விதத்தில் (ஆ) படிவத்திற்கு அமைய பொருள் அடமானப் புத்தகம் ஒன்று "இ" படிவத்திற்கு அமைய பொருள் அடமான விற்பனைப் புத்தகம் ஒன்றைச் சகல பொருள் அடகுபிடிப்பவரும் பேணிவருவதுடன், அப்புத்தகத்தை தனது வர்த்தகத்தின் பொழுது பயன்படுத்துதலும் வேண்டும். மேலும், அப்படிவங்களில் புகுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள சகல விவரங்களும் ஏற்கனவே, உட்புகுத்தப்படும் சந்தர்ப்பங்களில் விளக்கமாகவும் தெளிவாகவும் அவற்றுள் உட்புகுத்தப்படுவதுடன் அக்காலத்திற்குரிய சகல தெளிவுறுத்தல்களும் அவரினால் செய்யப்படல் வேண்டும்.

அடகுத்துண்டுகள்.

20. (1) சகல அடகு சீட்டுக்களிலும் இங்கு 1 ஆம் அட்டவணையில் (இ) படிவத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விதத்திலான மூலப்பிரதியும், உபபிரதியுடனும் அப்படிவத்திற்கமைய வேண்டிய நியதிகளுக்கு ஏற்ப எழுதி கையொப்பமிடுதல் வேண்டும்.

(2) 2 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சகல விபரங்களும், சகல சீட்டுக்களில் முதல் பிரதியில் மறுபுறத்தில் சிங்கள, தமிழ், ஆங்கில மும்மொழிகளிலும் வாசிக்கக்கூடிய விதத்தில் அச்சிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(3) அடமானம் ஒன்றை அடகு வைக்கும் பொழுது அவ் அடமானத்திற்குரிய அடகுச் சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பணத்தின் பெறுமதிக்கு முத்திரை ஒட்டப்பட்டிருத்தல் வேண்டும். அம்முத்திரைக்கான செலவுகள் அடகு பிடிப்பவரினால் ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

(4) (அ) பொருள் அடகு பிடிப்பவரினால் அடகுச் சீட்டின் உபபடிவத்தில் கையொப்பமிடப்பட்டால் அன்றி கையொப்பம் இடும்வரை ;

(ஆ) பொருள் அடகு பிடிப்பவரினால் அடகுச் சீட்டின் முதற் பிரதியில் கையொப்பமிட்டு அதனை, பொருள் அடகு பிடிப்பவருக்கு வழங்கினாலன்றி, வழங்கப்பட்டதாக ஏற்றுக்கொள்ளும்வரை ;

(இ) பொருள் அடகுபிடிப்பவரினால் அடகுச் சீட்டின் மூலப்படிவத்தை அடகுபிடிப்பவரிடம் பெற்றுக்கொண்டு அதனை அவர் ஏற்றுக்கொண்டால் அன்றி ;

(ஈ) வருடாந்த வட்டியை அடகுச் சீட்டில் குறிப்பிட்டாலன்றி எந்தவொரு பொருளும் ஈட்டுக்கு வாங்கப்பட்டதாக கருதப்பட மாட்டாது. அத்துடன் ஈட்டுக்கு வாங்கப்பட்டதாக கணிக்கப்படுதலும் கூடாது.

21. எந்தவொரு பொருள் அடகுபிடிப்பவராலும் அடமானம் ஒன்றின் மீது வழங்கப்படும் கடனொன்றுக்காக 2 ஆம் அட்டவணையில் நிச்சயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள விதத்திற்கு அப்பாற்பட்ட வட்டியொன்றை அறவிடப்படலாகாது. வட்டி அளவுகள்.

எனினும், அடமானம் மீது வழங்கப்படும் கடனொன்றுக்காக மொத்த விற்பனையில் வரியொன்றை வழங்க வேண்டிய சந்தர்ப்பங்களில், பொருள் அடகுபிடிப்பவரினால் பொருள் அடகு வைப்பவரிடம் அறவிடுதல் இவ்வாசகத்தின் முன்னுள்ள ஏற்பாடுகளில் புகுத்தப்பட்ட ஏதாவதொன்றினால் தடை செய்யப்பட்டுள்ளதாகக் கருதப்படலாகாது.

இவ்வாசகத்தின் ''அடமானம்'' என்பது, அடகு வைக்கப்பட்டதும் உரிய தினத்திற்கு முன் விடுவிக்கப்படாததுமான அடமானங்கள் என்ற கருத்துறும்.

## அத்தியாயம் VI

## அடமானப் பொருட்கள்

22. அடமானப் பொருட்கள் அனைத்தும் அவை அடமானம் வைக்கப்பட்ட திகதி முதல் 12 மாதங்களுக்குள் (இந்நியதிச் சட்டத்தில் இதன் பிறகு "விடுவிக்கப்படும் காலம்" எனக் குறிப்பிடப்படும் கால எல்லைகள்) விடுவித்துக் கொள்ளப்படுதல் வேண்டும். 24 மாதங்களுக்குள் அடமானங்கள் விடுவிக்கப்படல்.

அடகு வைத்த திகதியைத் தவிர்த்து இக்காலம் கணிக்கப்படல் வேண்டும்.

23. இந்நியதிச் சட்டத்தின் 22 ஆம் வாசகத்தில் என்ன குறிப்பிடப்பட்டிருந்தாலும் சகல அடமானங்களும் அவற்றை விடுவிக்கப்படும் காலம் கடந்திருந்தாலும் கூட இந்நியதிச் சட்டத்தின் 32 ஆம் வாசகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விதத்தில் அவைகள் வெளியேற்றப்படும் வரை, சகல அடகுபிடிப்பவர்களும் அவ் அடமானங்களை விடுவித்துக் கொள்வதற்கு இயலுமாகும்.

24. (i) ஏதாவதொரு அடமானத்திற்குரிய அடகுத்துண்டில் முதல் மூலப் பிரதியில் அடகு வைத்தவரினால் அடகுபிடிப்பவருக்கு ஒப்படைத்த பொருள் அடகுபிடிப்பவர் அல்லது அவருடைய பிரதிநிதி அல்லது ஊழியர் முன்னிலையில் அம்மூலப் பிரதியை கையொப்பமிட்டு, தனது அடையாளத்தை ஒப்புவிக்கச் செய்யப்பட்டால் அவ் அடமானத்தை விடுவித்துக் கொள்ளும் உரிமை அவ் ஈட்டாளருக்கு உண்டு ; அடமானம் ஒன்றை விடுவித்துக் கொள்ளும் செயற்பாடுகள்.

(ii) பொருள் அடகு வைப்பவர் அல்லாத ஒரு நபரினால் ஏதாவதொரு அடமானத்திற்குரிய அடமானச் சீட்டின் மூலப்படிவம் அவ் அடமானத்தை அடகு வைத்தவருடைய கையொப்பத்துடன் உரிய விதத்தில் கையொப்பம் இடச் செய்து, அடகுபிடிப்பவரிடம் கையளிக்கப்பட்டால், அவரினால் அடகுபிடிப்பவர் அல்லது அவருடைய பிரதிநிதி அல்லது ஊழியர் முன்னிலையில் மூலப்படிவத்தில் கையொப்பமிட்டாலும் தனது அடையாளத்தை ஒப்புவித்தாலும், அவ் அடமானத்தை விடுவித்துக் கொள்ளும் உரிமை அந்நபருக்கு உண்டு ;

(iii) அடகு வைத்தவருடைய மரணத்தின் காரணமாக அல்லது இயலாமை காரணமாக அந்த அடமானத்தை விடுவித்துக் கொள்வதற்கு உரிமையுடைய, அவ்வடமானத்திற்குரிய அடகுத் துண்டின் மூலப் பிரதியை உடைய நபரினால் கூறப்படக்கூடியதும், எனினும் அடகு வைத்தவருடைய கையொப்பத்தை முறைப்படி பெற்றுக்கொண்டு ஈட்டுத்துண்டின் மூலப் பிரதியை அடகுபிடிப்பவருக்கு முன் சமர்ப்பிப்பதற்கு இயலாத சந்தர்ப்பங்களில், அவ்வாறு அடகு வைத்தவரினாலும் அவருடைய அடையாளத்திற்கு சாட்சி சொல்பவரினாலும் இங்கு உப பட்டியலின் "இ" படிவத்திற்கு அமைய சமாதான நீதவான் ஒருவரிடம் அல்லது சத்தியப் பிரமாண ஆணையாளர் ஒருவர் முன்னிலையில் முறைப்படி வெளிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் அவ் அடமானத்திற்குரிய ஈட்டுச் சீட்டின் மூலப்படிவத்தை ஏற்றுக் கொள்பவரினால் பொருள் ஈடுபிடிப்பவரிடம் ஒப்படைக்கப்பட்டால், அவ் அடமானத்தை விடுவித்துக் கொள்வதற்கு மேற்குறிப்பிட்ட மூலப்படிவத்தாரிக்கு உரிமைகள் உண்டு ;

(iv) மேலுள்ள I, II, III உபவாசகங்களின் ஏற்பாடுகளின் கீழ் அடமானங்களுக்கு செலுத்த வேண்டிய கடன்களும், அதற்குரிய வட்டிகளும், அக்கடன்களுக்காகச் செலுத்தப்பட வேண்டிய வரிகள் இருப்பின் அவ்வரிகள் அடகுபிடிப்பவரினால், சந்தர்ப்பத்திற்கு ஏற்றாற்போல் அவ் அடமானம் தொடர்பாக அடகுச்சீட்டு சமர்ப்பிக்கும் பொருள் அடகு வைத்தவரிடம் அல்லது அத்துண்டை ஏற்பவரிடம் அவ் அடமானம் ஒப்படைக்கப்படல் வேண்டும். அடமானம் ஒப்படைத்தல் தொடர்பாக பொருள் அடகுபிடிப்பவருக்கு இதன் மூலம் பாதுகாப்புக்கள் கிட்டச் செய்யப்படுகின்றது.

சட்டத்திற்கு முரணான விதத்தில் ஈட்டுத் துண்டுகளைத் தன்வசம் வைத்துக் கொள்ளுதல்.

(ஏ) எனினும், அடகுச்சீட்டுடையவர் அதனைக் களவாடி அல்லது பிறிதொரு விதத்தில் சட்டத்திற்கு முரணான விதத்தில் உடைமைகளைப் பெற்றுக் கொண்டுள்ளதாக சந்தேகிப்பதற்கு பொருள் அடகு பிடிப்பவருக்குப் போதிய காரணங்கள் இருப்பின் அப்பிரதேசத்துக்குப் பொறுப்பான பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் அல்லது கிராம சேவையாளரிடம் கூடிய கதியில் ஒப்படைத்தல் வேண்டும். கிராம சேவையாளரிடம் ஒப்படைக்கப்பட்ட நபர் வருவாராயின் அக்கிராம சேவகர் கூடிய கதியில் உரிய அடகுவைப்புப் பிரதேச பொலிஸாரிடம் ஈட்டுத்துண்டுடன் அந்நபரை ஒப்படைத்தல் வேண்டும். எந்த விதத்திலாவது பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நபரை ஈட்டுச் சீட்டுடன் பொருத்தமான அதிகாரங்களையுடைய நீதிமன்றத்தில் முன்னிறுத்துதல் வேண்டும்.

அடமானத்தின் பெறுமதிகள் குறைக்கச் செய்தல் தொடர்பான நட்டஈடு.

25. அடமானம் ஒன்றை விடுவித்துக் கொள்ள உரிமை உள்ளவரும், அதனைப் பாதுகாத்துக் கொள்வதில் முற்படுபவருமான ஒருவரினால் அவ் அடமானம் ஈட்டுக்கு வைக்கப்பட்ட சந்தர்ப்பத்தின் பொழுது அதிலிருந்து பெறுமதிகள் பொருள், அடகுபிடிப்பவருடைய தவறினால், கவனயீனம் ஒன்றால் அல்லது வேண்டுமென்றே செய்யப்பட்ட ஒழுக்கவீனம் ஒன்றால் அல்லது இவை அனைத்தினாலும் அல்லது பெறுமதி குறைவாக உள்ளது என அல்லது குறைக்கப்பட்டுள்ளது என பொருத்தமான சட்ட அதிகாரமுடைய நீதிமன்றம் ஒன்றில் அந்நீதிமன்றம் திருப்தியடையும் விதத்தில் சுட்டிக்காட்டப்பட்டால், பொருத்தமுடையதாகும் என நீதிமன்றம் கருதினால், அவ் அடமானத்திற்கு பொறுப்பானவர் திருப்தியடையும் வண்ணம் நியாயமான நட்டஈடு ஒன்றை அந்த நீதிமன்றத்தினால் வழங்குவதற்கு இயலும், அவ்விதம் வழங்கப்பட்ட நட்டஈட்டுத் தொகை பொருள் அடகு பிடிப்பவருக்கு வழங்கப்பட வேண்டிய பணத்தில் குறைத்துக் கொள்ளப்படல் வேண்டும். அவ்வாறு இல்லாது விடின் நீதிமன்றத்தினால் கட்டளையிடப்படும் வேறு ஒருவிதத்தில் அடகுபிடிப்பவரினால் இந்நட்டஈடு வழங்கப்படுதல் வேண்டும்.

அடகுத்துண்டு இன்றி பொருள் உரிமையாளரிற்கு அடகு வைப்பவர்களுக்குப் பாதுகாப்புக்கள்.

26. (i) தான் ஏதாவதொரு அடமானத்தின் உரிமையாளர் என்று கூறும் எனினும் ஈட்டுச் சீட்டின் மூலப் பிரதியை இழந்த யாராவது ஒரு நபரினால் அல்லது ஈட்டுச் சீட்டின் மூலப்பிரதியை வகிப்பதற்கு தனக்கு உரிமையுண்டு எனவும், எனினும், அத்துண்டின் மூலப்பிரதி காணாமல் போய், களவாடப்பட்டு, அழிவுற்று அல்லது யாராவது ஒருவர் வஞ்சிக்கும் விதத்தில் தம்மிடம் பெற்றுக் கொண்டார் என கூறும் ஒரு நபரினால் இங்கு உபவடித்தின் "இ" படிவத்திற்கு அமைய சமாதான நீதிபதி ஒருவர் முன்னிலையில் தானும், தனது அடையாளத்திற்கு சாட்சியாகும் ஒரு நபரினாலும் வெளிப்பாடு ஒன்று அடகுபிடிப்பவரிடம் ஒப்படைக்கப்பட்டால் அவ் அடகுத் துண்டின் மூலப் பிரதியில் அந்நபரினால் சமர்ப்பிக்கப்பட்டால் உரித்தாகும் சகல உரிமைகளும் மாற்றுச் செயற்பாடுகளும் அவருக்கும் பொருள் அடகுபிடிப்பவருக்கும் இடையில் ஏற்படும்.

எனினும், அடமானம் ஒன்றை பாதுகாத்துக் கொள்ளும் பணிகளுக்கு அவர் கையொப்பமிடப்பட வேண்டிய உறுதி 20 ஆம் விலாசத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அடகுச்சீட்டின் துணைப்படிவமாகும்.

(ii) மேற்குறிப்பிடப்பட்டுள்ள வெளிப்பாடு அங்கு உள்ளடக்கப்பட்டுள்ள முக்கிய விபரங்கள் தொடர்பாக வஞ்சிக்கத்தகும் அல்லது பொய்யானதாக அல்லது உண்மையான அல்லது அனுமதிக்கப்பட்ட அறிவித்தலொன்று பொருள் அடகு பிடிப்பவருக்கு கிடைக்கப்பெறா

விட்டால், அடகுபிடித்தலை ஒப்படைத்தல் அல்லது அவ்வெளிப்பாடுகளுக்கு அமைய வேறுவிதத்தில் செயற்படுதல் தொடர்பாக 26 (1) இல் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விதத்தில் பொறுப்புக்களினால் அடகுபிடிப்பவர் பாதுகாக்கப்படுவார்.

27. (i) அடமானம் ஒன்றை விடுவித்துக் கொள்ளும் பணிகளின் பொழுது அடமானத் துண்டின் மூலப்பிரதியை பொருள் அடகுபிடிப்பவரிடம் ஒப்படைக்கும் சந்தர்ப்பம் ஒன்றை அவ் அடமானம் விடுவிக்கப்பட்ட தினத்திலிருந்து கணிக்கப்படும். 12 மாத காலங்கள் சழியும் வரை அடகுபிடிப்பவரினர் அவ் அடகுத் துண்டின் மூலப் பிரதி, துணைப்பிரதி தன்வசம் வைத்துக் கொள்ளப்படல் வேண்டும்.

அடமானம் விடுவிக்கப்படுதல் அல்லது விற்கப்படல் அல்லது அதன்பின் ஈட்டுத் துண்டு அடகு பிடிப்பவரினால் பேணப்படல் வேண்டும்.

(ii) அடமானத்திற்குரிய அடகுத்துண்டின் மூலப்பிரதியை ஒப்படைக்காமல் அவ் அடமானம் விடுவிக்கப்பட்ட சந்தர்ப்பம் ஒன்றில் அவ்வாறு அவ்வடமானம் விடுவிக்கப்பட்ட தினத்திலிருந்து கணிக்கப்படும். 24 மாதங்கள் முடியும் வரை அவ் அடமானத்திற்குரிய ஈட்டுத் துண்டின் துணைப்படிவமும் அதனை விடுவிக்கும் பணிகளுக்காக 26 (i) உடைய உபவாசகத்தின் கீழ் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட வெளிப்பாடும் அடகுபிடிப்பவரினால் தன்வசம் வைத்துக் கொள்ளப்படல் வேண்டும் ;

(iii) இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அடமானம் ஒன்று விற்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அவ் அடமானத்திற்குரிய ஈட்டுச் சீட்டின் துணைப்படிவத்தை அவ்விற்றல் நடைபெற்ற தினம் முதல் கணிக்கப்படும் 12 மாதங்கள் செல்லும்வரை அடகு பிடிப்பவரினால் தன்வசம் வைத்துக் கொள்ளல் வேண்டும்.

28. (i) ஏதாவதொரு அடமானம் ஒன்றை அடகுபிடிப்பவரிடம் அடகு வைக்கப்பட்டிருந்த பொழுது அவ்வடமானம் காணாமல் போன சந்தர்ப்பங்களில் பொருள் அடகு வைத்தவருக்கு அல்லது அவ் அடமானத்தை விடுவித்துக் கொள்வதற்கு பொறுமையுடைய பிரிதொரு நபருக்கு அல்லது அவ் அடமானத்தின் இன்றைய சந்தைப் பெறுமதியை அப்பொருளை ஈட்டுக்கு வைத்த நபரினால் வைத்துக்கொள்ளப்பட்ட பிணைப்பணத்தினால் செலுத்தப்படல் வேண்டும் ;

ஈடுபிடிப்பவரினால் வைத்துக்கொள்ளப்பட்ட பிணைப் பணத்தை ஈடுசெய்தல், திருப்பிக் கொடுத்தல்.

(ii) மேலே முதலாம் உபவாசகத்தின் கீழ் வழங்கப்பட்ட பணம் உபவாசகத்திற்கமைய வைத்துக் கொள்ளப்பட்ட பிணைப்பணத்திற்குக் குறைவான தொகையை அடகு பிடிப்பவரினால் பிணை ஒன்றாக மீண்டும் செலுத்துதல் வேண்டும். (1) ஆம் உப வாசகத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய பிணைப்பணத்திற்கு அப்பால் சென்றால் அடகு வைத்தவருக்கு அல்லது அவ் அடமானத்தை விடுவித்துக் கொள்ள உரிமை பெறுபவரிடம் வழங்குவதற்காக அவ்வாறான மேலதிகப்பணத் தொகையை செலுத்துதல் வேண்டும். இதற்கு மேலதிகமாக 10 (2) ஆம் உப வாசகத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிணைப்பணத்தை வைப்புச் செய்தல் வேண்டும் ;

ஈட்டை ஈடுசெய்தல் வர்த்தகத்தின் கணக்குகளை விடுவித்துக் கொள்ளல்.

(iii) யாராவது ஒரு நபரினால் பொருள் அடகுபிடிக்கும் வர்த்தகத்தைத் தொடர்ந்து செய்வதனைக் கைவிடும் சமயத்தில் அவரினால் வைக்கப்பட்டுள்ள பிணைப்பணத்திலும் உழைத்த வட்டியினால் (1) உப வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணத்தை வழங்குவதற்காக வழங்கப்படக்கூடிய ஏதாவதொரு பணமிருப்பின், அத்தொகையைக் கழித்துக் கொண்டு பாக்கிப் பணத்தை அடகுபிடிப்பவருக்குச் செலுத்துதல் வேண்டும்.

வர்த்தகத்தை முடித்து கணக்குகளை முடிவிடும் போது அதன் பொறுப்புகளில் இருந்து விடுபடல் பிணை, வட்டி போன்றவற்றை தடுத்துக் கொண்டு மீதியை அடகு வைத்தவருக்கு வழங்குதல்.

29. (i) தீயினால், இயற்கை அனர்த்தங்களினால் அல்லது வேறேதும் அனர்த்தங்களின் காரணமாக அல்லது அடமானமொன்று அழிந்து, அடமானத்திற்கு கேடுகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் அடகு விடுவிக்கப்பட வேண்டிய கால எல்லைக்குள் கேட்கப்பட்டால் கடன், கடன்பணத்தையும் வட்டியையும் அக்கடனுக்காகச் செலுத்தப்பட வேண்டிய ஏதாவது வரிகளிலிருந்தால் அவ்வரியையும் கழித்து அடமானத்தின் பெறுமதியை வழங்குவதற்கு அடகுபிடிப்பவர் எவ்விதத்திலேனும் கட்டுப்பட்டுள்ளார்.

30. (i) பொருள் அடகுபிடிக்கும் சகலரும் தன்னிடம் அடகு வைக்கப்பட்டுள்ள பொருட்களின் முழுப்பெறுமதிகளையும் பின்னர் அடகுகளாகப் .பெற்றுக்கொள்வதற்குக் கருதப்படும் சகலவிதமான அடகுகளையும், பொருட்களின் சம்பூரணப் பெறுமதிகளையும் சுட்டிக்காட்டி, தமது வர்த்தகத்தை பூரணப் பாதுகாப்புக்களையுடைய காப்புறுதிக்குட்படுத்தும் விதத்தில் காப்புறுதி செய்தல் வேண்டும் ;

காப்புறுதிப் பாதுகாப்புக்கள் பெற்றுக் கொள்ளல்.

(ii) அடகு பிடிக்கப்படும் பொருட்களது தரத்துக்குப் பங்கம் ஏற்படாத வகையில் அவற்றைக் களஞ்சியப்படுத்தி வைக்க ஏற்பாடுகள் செய்வது அடகு பிடிப்பவரது முழுமையான பொறுப்பாகும்.

பொருள் அடகு விற்பவருடைய பற்றுச்சீட்டு.

31. அடமானம் ஒன்று விடுவித்துக் கொள்ளப்படும் பொழுது பொருள் அடகுபிடிப்பவருக்கு, திருப்பி வழங்கப்பட்ட கடன் பணமும் வட்டிப்பணமும் உரிய ஏனைய வரிகளும் அறவிடப்பட்டிருப்பின் அவ் அடகுகளுக்காகப் பற்றுச் சீட்டொன்று சகல அடகுபிடிப்பவர்களாலும் வழங்கப்படுவதுடன், அப்பற்றுச் சீட்டுக்களின் பிரதியொன்றை "உ" படிவத்துக்கு அமைய வைத்துக்கொள்ளல் வேண்டும்.

அடமானம் ஏல விற்பனையில் விற்கப்படலாம்.

32. (i) அடகினை விடுவித்துக் கொள்வதற்குரிய கால எல்லைக்குள் விடுவித்துக் கொள்ளாத சகல விதமான அடமானங்களும் பிரசித்த ஏல விற்பனையில் நின்றும் ஒதுக்கிக் கொள்வதற்கு இயலும். எனினும், வேறு விதத்தில் அகற்றிக் கொள்ளப்படலாகாது. மேலும், 3 ஆம் உபவாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகள் அவ்விற்பனைகளின் பொழுது கடைபிடிக்கப்படுதல் வேண்டும் ;

(ii) இவ்வாசகத்தின் முன்னுள்ள ஏற்பாடுகளுக்கமைய அடமானமொன்று பிரசித்த ஏல விற்பனையில் விற்கப்படும் பொழுது, அவ் அடமானம் அடகு வைக்கப்பட்டுள்ளமை யாரேனும் ஒரு ஈட்டாளிரினால் அப்பொருள் அடகுபிடிப்பவரினால் அவ்விற்பனை செய்யப்படவுள்ள திகதி, நேரம், விற்பனை செய்யப்படும் இடங்களை குறிப்பிட்ட அறிவித்தல் ஒன்றை ஆகக்குறைந்த பட்சம் 60 நாட்களுக்கு முன்னரேனும் அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்காக மாகாண இறைவரி ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும். அவ் அறிவித்தல் கிடைக்கப்பெற்று 15 நாட்களின் பின்னர், மாகாண இறைவரி ஆணையாளர் அவர்களினால் தமது தீர்மானத்தை ஏல விற்பனை நடாத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்ட தினத்திற்கு 21 நாட்களுக்கு முன்னர் அடகு வைத்தவருக்கு எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும்.

(iii) இந்நியதிச் சட்டத்தின் கீழ் யாராவது ஒரு அடகுபிடிப்பவர் அடமானம் ஒன்றை விற்பதற்கு உள்ள சந்தர்ப்பம் ஒன்றில் அந்த அடமானத்தை பிரசித்த ஏல விற்பனையில் விற்பதற்காக மாகாண இறைவரி ஆணையாளர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று அத்திகதி, நேரம், ஏல விற்பனை நடைபெறும் இடம் அடங்கலாக அறிவித்தல் ஒன்றைக் குறைந்த பட்சம் 14 நாட்களுக்கு முன்னரேனும் அடகுபிடிப்பவரினால் அடமானத்தை வைத்த நபருக்கு எழுத்துமூலம் பதிவுத் தபாலில் அறிவித்தல் வேண்டும்.

33. (1) இந்நியதிச் சட்டத்தின் கீழ் அடமானம் ஒன்று விற்கப்பட்ட சகல சந்தர்ப்பங்களிலும் அவ் அடமானத்தின் மீது வழங்கப்பட்ட கடன் பணம் அவ் அடமானம் விற்கப்பட்ட திகதிவரையில் அக்கடனுக்காக அறவிடப்படவேண்டிய வட்டியை அக்கடனுக்காக செலுத்தப்படவேண்டிய ஏதாவது வட்டிகள் இருப்பின் அவ்வரியை தாண்டிச் செல்லும் பணமொன்றிற்கு அவ் அடமானம் விற்கப்பட்ட பொழுது பொருள் அடகுபிடிப்பவரினால்,

கடன்கள், வட்டி மொத்த விற்பனை வரி அல்லாது வேறு வரி ஒன்று.

(அ) அடமானம் விற்கப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதனையும், விற்பதற்காக வகிக்கப்பட்ட செலவினங்கள், கட்டணங்கள் குறைக்கப்பட்ட பின் பொருள் அடகுபிடித்தவருடைய வரவில் உள்ள பணத்தொகை எவ்வளவு என்பதனையும், அவ் அடமான அடகுக்காரருக்கு கால தாமதமின்றி அறிவிக்கப்படல் வேண்டும். மேலும் ;

(ஆ) மேற்குறித்த அறிவித்தல் விடுக்கப்பட்ட திகதியிலிருந்து ஒருவருட கால எல்லைக்குள் வைப்பில் உள்ள பணத்தொகையை அடகு வைத்தவர் கேட்கும் பட்சத்தில் அவ் அடகு வைத்தவருக்கு அப்பணத்தைச் செலுத்துதல் வேண்டும் ;

31 ஆம் வாசகத் திற்கு அமைய அறி விக்கப்படவேண் டிய முறைகள்.

(இ) (ஆ) பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைய ஒரு வருட காலத்துக்குள் அடகு வைத்தவர் அவ் வைப்பில் உள்ள பணத்தை கேட்கும் தனது உரிமைகளை முற்படுத்தப்படாவிடின், அக்கால எல்லை முடிந்தவுடன் அப்பணத்தை மாகாண இறைவரி ஆணையாளரின் மாகாண சபை நிதியத்தில் வரவு வைப்பதற்காக ஒப்படைத்தல் வேண்டும்.

34. (1) இறைவரி ஆணையாளர் அவர்களிடம் 33 ஆம் வாசகத்தின் ஏற்பாட்டிற்கமைய ஏதாவதொரு பணத்தொகை அடகு வைத்தவர் பெயரில் வரவில் வைப்புச் செய்யப்பட்ட சந்தர்ப்பங்களில் அது பற்றி அடகு வைத்தவருக்கு உடனடியாக அறிவிக்கப்படல் வேண்டும் ;

அடகு வைத்தவரது வரவில் மாகாண சபையில் வைப்புச் செய்யப்படும் தொகை.

(2) இறைவரி ஆணையாளர் அவர்களினால் (1) ஆம் வாசகத்துக்கு அமைய அனுப்பப்பட்ட அறிவித்தல் ஒன்று தனக்கு கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து 02 வருட காலத்துக்குள் அனுமதிப்பத்திரதாரியுடைய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பணத்தொகையை தனக்கு வழங்கும்படி இறைவரி ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டால் அப்பணத்தொகையை அவ்வேண்டுகோள் கிடைக்கப்பெற்று 30 நாட்களுக்குள் அந்நபருக்கு வழங்கப்படல் வேண்டும்.

(3) (2) ஆம் வாசகத்துக்கமைய 02 வருடகாலத்துக்குள் வேண்டுகோளொன்று நிறைவேற்றப்படாவிட்டால், அடகுபிடித்தவர் ஒருவருக்கு வழங்கப்பட வேண்டிய பணத்தை இறைவரி ஆணையாளர் அவர்கள் மாகாண சபை நிதியத்திற்கு வைப்புச் செய்தல் வேண்டும்.

35. பொருள் அடகுபிடிப்பவர் ஒருவரிடம் அடகு வைக்கப்பட்ட அடகொன்றை இந்நியதிச் சட்டத்தின் கீழ் நடாத்தப்படும் அல்லது நடாத்தப்படுவதாக உள்ள பிரசித்த ஏல விற்பனையொன்றின் பொழுது அடகுபிடிக்கப்படுபவரினால் உரிய விலையை வைத்து விலைக்கு வாங்க முடியும். அவ்வாறு விலைக்கு வாங்கப்பட்டதன் பின் அவ்விலைக்கு வாங்கிய அடமானத்தின் பரம உரிமையாளராக கணிக்கப்படுவார்.

பொருள் அடகு பிடிப்பவரினால் அடமானம் விலைக்கு வாங்கப்படல்.

## அத்தியாயம் VII

## உட்புகுத்தல், பரிசோதித்தல், தடைசெய்யப் பிடித்துக் கொள்ளல்

36. (1) அடமானம் ஒன்று இந்நியதிச் சட்டத்தின் கீழ் விற்கப்பட்ட தினம் முதல் 02 வருடங்களுக்குள் எச்சந்தர்ப்பத்திலேனும் பொருள் அடகு பிடிப்பவருடைய புத்தகத்தில் விற்றல் பற்றி குறிப்பிடப்பட்டுள்ள குறிப்புகளை ஏல விற்பனையாளரினால் தனது கையொப்பத்தினை இட்டு உறுதி செய்துள்ளதும், அவ் ஏல விற்பனை பற்றிய தகவல்கள் உள்ளடக்கப்பட்ட பெயர் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள குறிப்புக்களை அல்லது அவ்விரண்டில் எந்தவொரு அடகுச் சீட்டையுடையவரினால் இயலுமாவதுடன் அவ்விற்றல் தொடர்பாக அப்புத்தகத்தில் பெயர் அட்டவணையில் அல்லது அவ்விரண்டின் ஒன்றில் உள்ள குறிப்புகளைப் பரீட்சிப்பதற்கு அடகுபிடிப்பவர் அடகுச் சீட்டை பரிசோதிப்பதற்கு அனுமதி வழங்குதல் வேண்டும்.

விற்பனை ஏடுகளையும் கணக்குகளையும் ஆய்வு செய்யும் அதிகாரம்.

(2) மாகாண இறைவரி ஆணையாளர் அவர்களினால் அல்லது அவருடைய எழுத்துமூல அதிகாரம் வழங்கப்பட்டுள்ள பிரதி ஆணையாளர் ஒருவருக்கு, மதிப்பீட்டாளர் ஒருவருக்கு, பொருள் அடகுபிடிப்பவர் ஒருவருடைய வர்த்தகத்துக்குரிய கணக்குகளைப் பரீட்சிப்பதற்கு அதிகாரம் உண்டு.

37. யாராவது ஒரு அடகு வைப்பவர்,

(1) அடகுவைப்பதற்கு ஏதாவது ஒரு பொருளை அடகுபிடிப்பவர் ஒருவருக்கு சமர்ப்பிக்கும் பொழுது தனது ஆளடையாள அட்டை, கடவுச்சீட்டு அல்லது சாரதி அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பிக்காவிட்டாலும் ; அல்லது

தான் அடகு வைக்கும் பொருள் பற்றிய சரியான தகவல்களை சமர்ப்பிக்காவிட்டால் மதிப்பீட்டாளர் கடைபிடிக்க வேண்டிய செயற்பாடுகள்.

(2) அடகு வைப்பதற்காக ஏதாவது பொருளொன்றை அடகுபிடிப்பவரிடம் வழங்குவாரானால், எனினும் தனக்கு அப்பொருள் எவ்வாறு கிடைத்தது என காரணங்களைக் கூற மறுப்பாராயின் அல்லது அவ்வாறான விபரங்களைக் கூற முற்படாவிட்டால் ; அல்லது

(3) அடகு வைப்பதற்காக பொருள் அடகுபிடிப்பவரிடம் சமர்ப்பிக்கப்படும் பொருள் தன்னுடைய பொருளா, அல்லவா என்பவை பற்றிய விவரங்களை அல்லது தனது முகவரி போன்ற தகவல்களைப் பற்றி வேண்டுமென்றே மறைப்பாராயின், பொய்யாகக் கூறுவாராயின் ; அல்லது

(4) விடுவிப்பதற்கு உரிமையற்ற அடமானம் ஒன்றை விடுவித்துக் கொள்வதற்கு முயற்சி அல்லது கரிசனை எடுப்பாராயின் ;

(5) ஏதாவதொரு பொருளை அடகு வைப்பதற்காக அடகுபிடிப்பவரிடம் சமர்ப்பிக்கப்பட்ட பொழுது, அப்பொருள் களவாடப்பட்டது அல்லது சட்டத்திற்கு முரணான விதத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டது எனச் சந்தேகிக்கப்படக்கூடிய நிலைமை அடகுபிடிப்பாளருக்கு ஏற்படுமாயின்,

மேற்குறித்த அம்சங்களைக் கவனத்திற் கொள்ளும்போது உண்மையாகவும், நியாயமாகவும் சந்தேகம் ஏற்படுமெனின், குறித்த பொருளை ஈடுவைப்பவரையும் ஈட்டுப் பொருளையும் ஈட்டுச் சிட்டையையும் தமது பொறுப்பில் வைத்துக் கொண்டு இயன்றளவு துரிதமாகப் பொலிஸ் அலுவலரிடமோ அல்லது கிராம அலுவலரிடமோ ஒப்படைத்தல் வேண்டும். கிராம அலுவலரிடம் அவர் ஒப்படைக்கப்படும் பட்சத்தில் கிராம அலுவலர் இயன்றளவு துரிதமாகக் குறித்த அடகுபிடிக்கும் நிலையம் அமைந்துள்ள பொலிஸ் நிலையத்தில் அடகு பொருளுடன் அடகு சிட்டையையும் குறித்த நபருடன் ஒப்படைத்தல் வேண்டும். எவ்வகையிலேனும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்ட ஒருவர் அடகு பொருள், அடகுச் சிட்டை என்பவற்றுடன் உரிய அதிகாரம் கொண்ட நீதிமன்றம் ஒன்றில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியினால் ஆஜர் செய்யப்படுதல் வேண்டும்.

அடகுபிடிப்பாளருடைய வர்த்தக நிலையம் அல்லது வதிவிடத்தை பரீட்சிக்கும் அதிகாரம்.

38. இறைவரி உத்தியோகத்தர் அவர்களினால் அதிகாரங்கள் வழங்கப்பட்ட மாகாண அரச சேவையைச் சார்ந்த யாரேனும் ஒரு உத்தியோகத்தர் அல்லது குழு ஒன்று ஏதாவதொரு பொருள் அடகுபிடிக்கும் வர்த்தக நிலையம் ஒன்றுக்கு அல்லது வர்த்தக இடமொன்றிற்கு பகற்காலங்களில் உட்புகுத்துதல், அவ்வடகு பிடிப்பவரிடம் அடமானமாக வைக்கப்பட்டுள்ள அல்லது அவரினால் நடாத்திச் செல்லப்படும் புத்தகங்கள் அல்லது வேறு ஆவணங்களை பரீசித்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல் சட்டப்படியானதாகும். சிலவற்றிற்கு பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருடைய உதவி தேவைப்படும் என இறைவரி ஆணையாளர் அவர்கள் தீர்மானிக்கும் பட்சத்தில் அப்பொலிஸ் உத்தியோகத்தருடன் உரிய இடத்திற்குச் சென்று மேற்குறிப்பிட்ட அனைத்துச் செயற்பாடுகளையும் அல்லது அவற்றின் ஒரு சிலவற்றை நிறைவேற்றலாம். மேற்குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளை நிறைவேற்றும் பொழுது எந்தவொரு நபரும் அவ் உத்தியோகத்தருக்கு அல்லது அக்குழுவினருக்கு எதிர்ப்புக்கள் தெரிவித்தலாகாது.

## அத்தியாயம் VIII

## குற்றங்களும் தண்டனைகளும்

அடகு வைப்போர் அல்லது வேறு நபர்களினால் செய்யப்படும் பிழைகள்.

39. (1) அடகுபிடிப்பவரிடம் அடகு வைப்பதற்காக முற்படுத்தப்படும் ஒரு பொருளை, அது எவ்வாறு தனக்கு கிடைத்தது என்பதனைப்பற்றி திருப்திகரமாக ஏற்றுக் கொள்ளக்கூடிய விபரங்களைக் கூற மறுக்கும் அல்லது இயலாத,

(2) அடகு வைப்பதற்காக அடகுபிடிப்பவரிடம் சமர்ப்பிக்கப்படும் ஏதாவது ஒரு பொருள் தனது உடமைகளா, அல்லவா என்பது பற்றி அல்லது, தனது முகவரி தொடர்பாக அல்லது அப்பொருளின் உரிமையாளரின் பெயர், முகவரி தொடர்பாக அல்லது சிலவற்றை வேண்டுமென்றே மறைக்கும் போலி விபரங்களை கூறும் அடகு வைப்பவர் ஒருவரினால் வழங்கப்படும்.

(3) பிறிதொரு நபருக்குச் சொந்தமான உடமைகளை, பொருட்களை சட்டப்படியிலான காரணங்களின்றி பொருள் அடகு வைப்பவரிடம் அடகுவைக்கப்படும்.

(4) விடுவித்துக் கொள்வதற்கு உரிமையற்ற அடமானங்களை விடுவித்துக் கொள்வதற்கு முயற்சிக்கும் நபரொருவர்,

(5) யாராவது ஒரு அடகு வைப்போன் ஒரு பொருளை அடகு வைப்பதற்காக அடகுபிடிப்பவரிடம் முன்வைக்கப்படும் போது அப்பொருள் களவாடப்பட்டதை அல்லது மற்றும் சட்டத்திற்கு முரணான விதத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட பொருள் என சந்தேகத்திற்கு இடமான காரணங்கள் அடகுபிடிப்பவருக்கு ஏற்படுமாயின் அவை தொடர்பாக வேண்டுமென்றே போலித் தகவல்களை தெட்டத்தெளிவாகத் தெரிந்தும் வெளிப்படுத்துவாராயின்,

(6) இந்நியதிச் சட்டத்தின் ஏதாவதொரு ஏற்பாட்டை மறுக்கும் அல்லது நியதிச் சட்டத்தால் பின்பற்றப்பட வேண்டிய நியமம் ஒன்றை மறுக்கும் சகல நபர்களும் குற்றம் ஒன்றுக்கு குற்றவாளியாவார்.

அடகுபிடிப்பவரினால் செய்யப்படும் குற்றங்கள்.

40. (1) (அ) 10 வயதிற்குக் குறைவானதும் அல்லது மது போதையில் இருக்கும் அல்லது அவ்வாறு தெரியும் எந்தவொரு நபரிடமும் பொருளொன்றை அடகுபிடிப்பவர் ;

(ஆ) அடகுச்சீட்டின் மூலப்படிவத்தை அடகுபிடிப்பவருக்கு ஒப்படைக்காமல் பொருளொன்றை அடகுபிடிப்பவர் ;

(இ) வேறொரு அடகுபிடிப்பவரினால் வழங்கப்பட்டுள்ள அடகுச்சீட்டின் மூலப்படிவத்தை விலைக்கு வாங்கும் அல்லது அடகுபிடிக்கும் அல்லது கைமாற்றிக் கொள்ளும் ;

(ஈ) 18 வயதிற்குக் குறைந்த வயதுடைய ஊழியர்களை அடகுவைக்கும் சேவைகளுக்கு ஈடுபடுத்தும் ;

(உ) தன்னிடம் அடகு வைத்துள்ள அடமானமொன்றை இந்நியதிச்சட்ட ஏற்பாடுகளுக்குக் கீழ் நடாத்தப்படும் ஏல விற்பனையைத் தவிர்ந்த ஏனைய விதத்தில் விலைக்கு வாங்கும் ;

(ஊ) தன்னிடம் அடகுவைத்துள்ள அடமானம் ஒன்றை தன்னால் விலைக்கு வாங்கும் கருத்துடன் விடுவிப்பதற்கு வழி வகைகள் மேற்கொள்ளும் ;

(எ) தன்னிடம் அடகுவைக்கப்பட்டுள்ள அடமானம் ஒன்றை அல்லது அடகு வைப்பதற்கு முற்படுத்தப்படும் ஏதாவது பொருளொன்றை விடுவித்துக் கொள்வதற்கு வழங்கப்பட்டுள்ள காலத்திற்குள் விலைக்கு வாங்குவதற்கு, விற்பனை செய்வதற்கு அல்லது அகற்றிக்கொள்வதற்கு யாராவது ஒரு நபருடன் உடன்பாட்டுக்கு வரும் ;

(ஏ) தன்னிடம் அடகு வைத்துள்ள ஏதாவதொரு அடமானத்தை இந்நியதிச் சட்டத்தினால் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ள விதங்களைத் தவிர்ந்த விதத்தில் விற்கப்படும் அல்லது வேறு விதம் ஒன்றில் அகற்றும் ;

(ஐ) நியதிச் சட்டத்தால் தன்னால் நடாத்திச் செல்வதற்கு நிச்சயிக்கப்பட்டுள்ள யாதாவதொரு புத்தகத்தில் பொய்யான குறிப்பொன்றை செய்யும் அல்லது உட்புகுத்தப்படல் வேண்டும் என இந்நியதிச் சட்டத்தினால் கூறப்பட்டுள்ள குறிப்பொன்றை புகுத்துவதற்கு மறுக்கும் ;

(ஒ) ஏதாவதொரு நேர்மையானதும் நியாயமானதுமான காரணங்களின்றி 22 ஆம் வாசகத்தில் அல்லது 22 (5) ஆம் உபவாசக ஏற்பாடுகளின்கீழ் யாராவது ஒரு நபரைப்பிடித்துக் கொள்ளும் அல்லது தடுத்து வைத்துக் கொள்ளும் ;

(ஓ) தன்னிடம் அடகு வைக்கப்பட்டுள்ள எதிர்காலத்தில் அடகுபிடிப்பதற்கு ஊகிக்கப்பட்டுள்ள சகல விதமான அடமானங்களினதும், பொருட்களினதும் பூரண பெறுமானங்களைச் சுட்டிக்காட்டி தனது வர்த்தக ஸ்தாபனத்தை பூரணப்பொறுப்புடைய காப்புறுதி செய்து பாதுகாப்புக்களையுடையதாக்கிக் கொள்வதற்கு மறுக்கும் ;

(ஔ) இந்நியதிச்சட்ட ஏதாவதொரு ஏற்பாட்டை மீறும் அல்லது இந்நியதிச் சட்டத்தின் மூலம் தன்னால் செய்யப்படவேண்டிய ஒன்றை செய்வதற்கு மறுக்கும் ;

(க) மாகாண இறைவரி ஆணையாளர் அவர்களின் முறைப்படியிலமைந்த அனுமதிப்பத்திர மொன்றைப் பெற்றுக் கொள்ளாமல் அடகுபிடிக்கும் வர்த்தகமொன்றை நடாத்திச் செல்லும் ;

(ங) இந்நியதிச்சட்ட 6 ஆம் வாசக நடைமுறைகளுக்கு ஏற்ப இறைவரி ஆணையாளர் அவர்களுக்கு வருடாந்த கணக்கு அறிக்கைகளை முறைப்படி சமர்ப்பிக்கப்படாத ;

(ச) இந்நியதிச் சட்டத்தின் எந்தவொரு ஏற்பாடுகளை மீறும் சகல அடகுபிடிப்போர்களும் குற்றம் ஒன்றுக்கு குற்றவாளியாவார்கள் .

41. கழுவுவதற்கு, சுத்தம் செய்வதற்கு, அழுத்துவதற்கு, புதுப்பிப்பதற்கு, உற்பத்தி செய்வதற்கு, வேலையிடுவதற்கு, நேர்த்தியாக்குவதற்கு அல்லது அலங்காரப்படுத்துவதற்காக யாரேனும் ஒரு நபருக்கு வழங்கப்பட்டதாக தெளிவான புடைவை வகைகள், நிறைவு செய்யப்படாத பொருட்கள் அல்லது பொருட்கள் போன்றவற்றை தெரிந்தும் கூட அடகு வாங்குபவர்கள் அடகுபிடிப்பாளர் செய்யும் குற்றமாகும். ஏதாவதொரு நீதிமன்றத்தில் யாராவது ஒரு அடகுபிடிப்பாளர் இல்லாத சந்தர்ப்பத்திற்குட்பட்ட பிழையொன்றுக்கு குற்றவாளி மறுக்கப்பட்டால் அந்நீதிமன்றத்தினால் விதிக்கப்படும் வேறு தண்டனைகளுக்கு மேலதிகமாக அவ் அடமானம் நீதிக்கு முன் அல்லது நீதிமன்றத்தினால் கட்டளையிடப்படும் வேறு விதத்தில் அல்லது அதன் உரிமையாளருக்கு ஒப்படைக்குமாறு நீதிமன்றத்தினால் அடகுபிடிப்பாளருக்கு கட்டளையிடப்படலாம்.

ஒருசில சந்தர்ப்பங்களில் புடவை வகைகள், உடைகள் பூர்த்தி செய்யப் படாத பொருட்கள் போன்றவை அடகு வைத்தல் தடை யாகும் என்பது.

பொருள் அடகு பிடிப்பவர் செய்யும் குற்றங்கள்.

42. யாராயினும் ஒரு அடக்குக்காரருடைய வைப்பிலிருக்கும் பணத்தை 33 (1) ஈ வாசகத்தினால் சாட்டப்பட்டுள்ள விதத்தில் மாகாண இறைவரி ஆணையாளர் பெயரில் வைப்புச் செய்தவை மீறும் சகல அடகுக்குகாரர்களும் அக்குற்றங்களுக்கு குற்றவாளியாவதுடன் ஏதாவது ஒரு நீதிமன்றத்தால் யாராயினும் அடகு வைப்பவர் குற்றத்திற்கு குற்றவாளியாக்கப்படின் அக்குற்றத்திற்கு நீதிமன்றத்தால் நிச்சயிக்கப்படும் ஏனைய ஏதேனும் தண்டனைகளுக்கு மேலதிகமாக அப்பணத்திற்கு ஒத்த தொகையொன்றை தண்டனையொன்றாக அறவிடும் மாதிரியில் அவ்வடகு பிடிப்பவரிடம் அறவிடுவதற்கு அந்த நீதிமன்றத்தினால் கட்டளையிடப்படலாம். சகல பணத்தொகையையும் நீதிமன்றத்தினால் அறவிடப்படும் சந்தர்ப்பங்களில் அடகுக்காரருடைய வைப்பில் மாகாண சபை நிதியத்தில் அவை வைப்புச் செய்யப்படலாம்.

பொருள் அடகு பிடிப்பவருடைய ஊழியர் பிரதிநிதிகள் மேற் கொள்ளும் குற்றங்கள்.

43. அடகுபிடிக்கும் வர்த்தகத்தை நடாத்திச் செல்லும் போது அல்லது அதனுடன் தொடர்புடைய அல்லது அவ்வடகு பிடிப்பவருடைய ஊழியர் அல்லது அவரது பிரதிநிதியினால் செய்யப்பட்ட அல்லது செய்வதற்கு மறுக்கப்பட்ட அல்லது ஏதாவதொரு பணியை சந்தர்ப்பத்திற்கு ஏற்றாற் போல் அவ் அடகுபிடிப்பவரினால் செய்யப்பட்ட அல்லது செய்வதற்கு தவறிய மறுக்கப்பட்ட பணிகளாக கணிக்கப்படல் வேண்டும்.

எனினும், பொருள் அடகுவைப்பவர் அவருடைய கடையில் அல்லது வர்த்தக நிலையத்தில் இல்லாத சமயங்களில் அடகுபிடிப்பவரின் யாதாவது ஒரு ஊழியர் அல்லது பிரதிநிதியினால் இந்நியதிச் சட்டத்தின் ஏதாவதொரு ஏற்பாடுகளை மீறும் விதத்தில் ஏதாவதொரு செயற்பாட்டை செய்தாரானால் அல்லது அவ்வாறு செய்வதற்கு மறுப்பாரானால் அவ்வூழியர் அல்லது பிரதிநிதி குற்றம் ஒன்றுக்கு குற்றவாளியாவார்.

தண்டனைகள்.

44. (1) இந்நியதிச் சட்டத்தின் கீழ் செய்த குற்றம் ஒன்றுக்கு குற்றவாளியாக்கப்பட்ட சகலவிதமான நபர்களும் நீதிபதி ஒருவர் முன்னிலையில் மேற்கொள்ளப்படும் வழக்கு விசாரணைகளுக்குப் பின் குற்றவாளியாக்கப்பட்டால் ரூபா 200,000 இற்குக் மேற்படாத அபராதம் ஒன்றுக்கும் அல்லது ஆறு மாதத்திற்கு மேற்படாத காலச் சிறைத் தண்டனை அனுபவிப்பதற்கு அல்லது அபராதமும் சிறைத்தண்டனையும் ஆகிய இரண்டுக்கும் அடிபணிதல் வேண்டும். இந்த உப பிரிவின் கீழ் அறவிடப்படும் தொகை அனைத்தும் மாகாண சபை நிதியத்தில் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

(2) வருடாந்த அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ளாமல் அடகு வர்த்தகம் செய்யும் அடகுபிடிப்பாளர் ஒருவருக்கு (1) ஆம் உபவாசகத்துக்குக்கீழ் சுட்டிக்காட்டப்பட்டுள்ள தண்டனைகளுக்கு மேலதிகமாக அறவிடப்படவேண்டிய வருடாந்த அனுமதிப்பத்திர பாக்கிகளும், வருடாந்த அனுமதிப்பத்திர கட்டண பாக்கித் தொகையின் 10% சமமான பணமொன்றை தண்டனையாக அறவிடுவதற்கு நீதிமன்றம் கட்டளையிடுதல் வேண்டும். இவ் உபவாசகத்தின்கீழ் நீதிமன்றத்தினால் அறவிடப்படும் சகலவித பணமும் மாகாண சபை நிதியத்தில் வைப்புச் செய்யப்படல் வேண்டும்.

(3) வருடாந்த அனுமதிப்பத்திரத்தை புதுப்பித்துக் கொள்ளாமல் அடகு வர்த்தகத்தை நடாத்திச் செல்லும் அடகுபிடிப்பவருக்கு (1) ஆம் உபவாசகத்தின்கீழ் சுட்டிக்காட்டப்பட்டுள்ள தண்டனைகளுக்கு மேலதிலகமாக அறவிடுவதற்கு உள்ள அனுமதிப்பத்திர பாக்கி கட்டணங்கள், அனுமதிப்பத்திர பாக்கிக் கட்டணங்களின் 10% சமமான பணத்தொகையொன்றை தண்டனையாக அறவிட நீதிமன்றம் கட்டளையிடல் வேண்டும். இவ் உபவாசத்துக்கு அமைய நீதிமன்றத்தினால் அறவிடப்படும் சகல பணமும் மாகாண சபை நிதியத்தில் வைப்புச் செய்யப்படல் வேண்டும்.

(4) மேலே குறிப்பிடப்பட்ட (1) ஆம் உபவாசகத்தின் கீழுள்ள தண்டனைகளுக்கு மேலதிகமாக 40 ஆம் வாசகத்தின் கீழ் குற்றம் ஒன்றுக்கு குற்றவாளியாக்கப்பட்டால் அக்குற்றத்திற்காக அந்நீதிமன்றத்தினால் விதிக்கப்படும் மற்றும் தண்டனைகளுக்கு மேலதிகமாக, அவ் அடமானத்தை நீதிமன்றத்திற்கு முன் அல்லது நீதிமன்றத்தினால் கட்டளையிடப்படும் வேறொரு விதத்தில் அல்லது அவ்வுரிமையாளருக்கு ஒப்படைக்குமாறு அப்பொருள் அடகுபிடிப்பவருக்கு நீதிமன்றத்தினால் நிச்சயிக்கப்படலாம்.

(5) மேற்குறிப்பிட்டுள்ள (1) ஆம் உபவாசகத்தின் கீழ் தண்டனைகளுக்கு மேலதிகமாக 41 ஆம் வாசகத்தின் கீழ் குற்றம் ஒன்றுக்கு குற்றவாளியாக்கப்பட்டால் அக்குற்றத்திற்காக அந்நீதிமன்றத்தினால் விதிக்கப்படக்கூடிய ஏனைய ஏதாவது தண்டனைகளுக்கு மேலதிகமாக அப்பணத்தொகைக்குச் சமமான பணத்தொகையொன்றை அறவிடக்கூடிய விதத்தில் அப்பொருள் அடகுபிடிப்பவரிடம் அறவிட்டுக்கொள்வதற்கு அந்நீதிமன்றத்தினால் கட்டளையிடப்படலாம். அச்சகல பணமும் நீதிமன்றத்தினால் அறவிடப்படும் பட்சத்தில் அப்பணம் அனைத்தும் மாகாண சபை நிதியத்தின் பொறுப்பில் வைப்புச் செய்யப்படல் வேண்டும்.

(6) 1 ஆம் உபவாசகத்தின் கீழ் தண்டனைகளுக்கு மேலதிகமாக அடகு வியாபாரம் நடாத்திச் செல்லும் அடகு பிடிப்பவருடைய வர்த்தகத்தை மூடிவிடுமாறு கட்டளையிடவும் நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

பொருள் அடகு பிடிப்பவர் உடமையில் சட்டத்திற்கு முரணான பொருட்கள் வைத்துக் கொள்ளப்படல்.

45. யாதாவதொரு அடகுபிடிப்பவருடைய உடமையில் ஏதாவது ஒரு பொருள் அல்லது பொருட்களைச் சட்டத்திற்கு முரணான விதத்தில் வைத்துக் கொண்டிருந்ததாக இந்நியதிச் சட்டத்தின் கீழ் நடாத்தப்படும் ஒரு வழக்கின் போது, நீதிமன்றமொன்றிற்கு அறியத்தரும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அப்பொருளை அல்லது அப்பொருட்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறும், நீதிமன்றத்தினால் பொருத்தமுடையதாகும் எனக் கட்டளையிடும் சந்தர்ப்பங்களில் அக்கட்டளைகளுக்கிணங்க பெயர் குறிக்கப்படும் எந்தவொரு நபருக்கும் அப்பொருளை அல்லது பொருட்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறு கட்டளையிடும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு உண்டு.

அத்தியாயம் XI

## வர்த்தகத்தைச் சாட்டுதலும் முடிவுக்குக் கொண்டு வருதலும்

அனுமதிப்பத்திரத்திற்கு விண்ணப்பிக்கும் போது வர்த்தகத்தை ஒப்படைக்கும் நபர் தொடர்பான நிரூபித்தல் பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கப்படல்.

46. (1) பொருள் அடகுபிடிக்கும் வர்த்தகம் தனிநபர் ஒருவரினால் நடாத்தப்படுவதாயின் அந்நபருடைய மரணத்திற்குப் பின் அவ்வர்த்தகத்தை ஒப்படைப்பதற்கு கருதும்பட்சத்தில் அந்நபருடன் ஒன்றுபடுவதற்கான விபரங்கள் புகுத்தப்பட்ட நிரூபித்தல் பத்திரம் ஒன்றைத் தயாரித்து அனுமதிப்பத்திரத்தை பதிவு செய்வதற்காக விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் அவ் நிரூபித்தல் பத்திரத்தையும் சமர்ப்பித்தல் வேண்டும். எனினும் அந்நபருக்கு பொருள் அடகுபிடிக்கும் வர்த்தகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்காக இந்நியதிச் சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்று வழங்குவதற்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ள தகைமைகள் இருத்தல் வேண்டும்.

(2) பொருள் அடகுபிடிக்கும் வர்த்தகம் ஒன்று தனிநபர் ஒருவரினால் நடாத்திச் செல்லும் சந்தர்ப்பத்தில் அந்நபரினது மரணத்தின் பின்னர் ஒப்படைப்பதற்கிருந்த நபர்களும் மரணித்திருக்கும் சந்தர்ப்பத்தில், அம்மரணித்த நபர்களுக்குப் பதிலாக வேறு நபர்களுடன் கையொப்பமிடப்படும் பொறுப்புக்கள் உட்படுத்திய நிரூபித்தல் பத்திரம் ஒன்றை இறைவரி ஆணையாளர் அவர்களிடம் பதிவுக்காக சமர்பித்தல் வேண்டும்.

(3) (1) ஆம் உபவாசத்திற்கமைய ஒப்படைப்பொன்று செய்திராத சந்தர்ப்பங்களில் அல்லது ஒப்படைப்பு செய்யப்பட்டவர் அதற்கான தகைமைகளைப் பெற்றிராத சந்தர்ப்பத்தில் வர்த்தகத்தை முடிவு செய்வதற்காக யாராவது ஒரு நபரை இறைவரி ஆணையாளர் அவர்கள் நியமனம் செய்ய வேண்டும்.

(4) பொருள் அடகுபிடிப்பவருடைய பலவீனம் ஒன்றின் காரணமாக அல்லது வேறொரு காரணமாக அடகு வர்த்தகத்தை தொடர்ந்து நடாத்திச் செல்வதற்கு இயலாத சந்தர்ப்பங்களின் பொழுது பிரதம செயலாளருடைய முன் அனுமதியினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் இந்நியதிச் சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு தகைமையுடைய நபரொருவர் என இறைவரி ஆணையாளர் அவர்கள் திருப்தியடையும் ஒருவரிடம் பொறுப்பும் பத்திரம் ஒன்றினூடாக அவ்வர்த்தகத்தின் சொத்துக்களையும் வரவுகளையும் ஒப்படைக்கலாம்.

அவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் இறைவரி ஆணையாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் வருடாந்த அனுமதிப்பத்திரம், அவ் அடகு வர்த்தகத்தின் சொத்துக்கள், வரவுகள் ஒப்படைக்கப்பட்ட நபருக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரமாக கவனத்திற்கொள்ளப்பட வேண்டும்.

மேலும் அவ்வொப்படைத்தல் நடைபெற்ற திகதி முதல் அந்நபர் அவ்வர்த்தகம் தொடர்பாக இந்நியதிச் சட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சகல குறித்தொதுக்குதல்களுக்கும் கீழ்ப்படிவார்.

(5) அடகு வர்த்தகம் ஒன்று பங்குடைமையாளர்களால் நடாத்திச் செல்லப்படும் பொழுது, அவ்வர்த்தகம் இறுதியாக்கப்படும் பொழுது அடகு வைப்பவர்களுடைய பாதுகாப்புகளுக்காக பங்குடைமை வர்த்தக ஒப்பந்தத்தில் ஏற்பாடுகள் புகுத்தப்படுதல் வேண்டும். பங்குடைமை வர்த்தக ஒப்பந்தத்தில் அதுபற்றிய ஏற்பாடுகள் உட்புகுத்தப்படவில்லையென ஆணையாளர் கருதுவாரானால், அனுமதிப்பத்திரம் வழங்குவதை மறுத்துவிடலாம்.

வர்த்தக உரிமை வழங்குதல்கள்.

47. (1) அடகு வர்த்தகம் செய்யும் யாராவது ஒரு நபர், அவ்வர்த்தகத்தின் உரிமை வழங்குதல் பற்றிய கருத்துக்களையுடையவராயின் அதுபற்றி மூன்று மாதங்களுக்கு முன் மாகாண இறைவரி ஆணையாளர் அவர்களிடம் எழுத்துமூல வேண்டுகோள் ஒன்றை விடுத்தல் வேண்டும்.

(அ) (1) ஆம் உபவாசகத்திற்கு அமைய ஒரு நபர் இறைவரி ஆணையாளர் அவர்களிடம் எழுத்துமூல வேண்டுகோள் ஒன்று விடுத்தால் அத்தினம் முதல் 07 நாட்களுக்குள் தனது வர்த்தகத்தின் உரிமை வழங்குதல்களுக்கு உரித்தான நபருடைய பெயர், முகவரிகளை அடையாள அட்டை இலக்கத்துடன் வர்த்தகக் நிலையத்திற்கு முன்னரும், தினசரிப் பத்திரிகைகளிலும் பொது அறிவித்தலாக மும்மொழிகளிலும் பிரசித்தி பெறச் செய்தல் வேண்டும்.

(ஆ) வர்த்தக உரிமை பரிமாற்றத்திற்கு எழுத்துமூல வேண்டுகோளொன்று விடுக்கும் பட்சத்தில், இறைவரி ஆணையாளர் அக்கடிதம் கிடைத்து 07 நாட்களுக்குள்,

(i) அவ்வியாபாரத்தின் பொருள் அடகுபிடித்தலை குறிப்பிட்டுள்ள தினம் ஒன்று முதல் நிறுத்துமாறும் ;

(ii) அடகுபிடிப்பவருக்கும் ஒப்படைப்பவருக்கும் எதிராக முறைப்பாடுகள் எதுவும் இல்லையெனவும், வர்த்தகம் அமையப் பெற்றுள்ள பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடமும், அந்நபர்கள் நிரந்தரமாக வசிக்கும் பிரதேசத்திற்குப் பொறுப்பான பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடமிருந்து உறுதியொன்று சமர்ப்பிக்குமாறும் ;

(iii) அடகுபிடிப்பவருக்கும் ஒப்படைப்பவருக்கும் எதிராக நீதிமன்றத்தில் எவ்வித வழக்குகளும் இல்லையென ஒரு சத்தியக்கடதாசியைச் சமர்ப்பிக்குமாறும் ;

(iv) விடுவிப்பதற்கு உள்ள சகல அடமானங்கள் பற்றியும், தேவைப்படலாம் என ஊகிக்கப்படும் ஏனைய சகல விபரங்களையும் சமர்ப்பிக்குமாறும் ;

(v) ஒப்படைக்கப்பட்டவர் உரிய வர்த்தகத்தை பொறுப்பேற்ற தினம் முதல் இந்நியதிச் சட்ட நடைமுறைகளுக்கேற்ப செயற்படுவதாக அவரிடம் இருந்து சத்தியக் கடதாசி ஒன்றை சமர்ப்பிக்குமாறும் அடகுபிடிப்பவருக்கு எழுத்துமூல அறிவித்தல் ஒன்று விடுக்கப்படல் வேண்டும் ;

(இ) இவ்வாசகத்தின் கீழ் இறைவரி ஆணையாளர் அவர்களிடம் வேண்டுகோள் ஒன்றை விடுப்பதற்கு கட்டுப்பட்டுள்ள நபர் ஏதாவதொரு உடல், உள விரக்திகளுக்கு உட்பட்டிருப்பாராயின், அவ்வர்த்தகம் தனியாளுக்குச் சொந்தமான வர்த்தகமாயின் அவ்வேண்டுகோளை அந்நபருடைய அதிகாரம்பெற்ற பிரதிநிதி ஒருவர் மூலம் விடுவிக்கப்படலாம். கூட்டு வியாபாரம் ஒன்றானால் அவ்வேண்டுகோளை வேறு பங்காளியினராலும், வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றானால் அவ்வேண்டுகோளை வேறு பணிப்பாளர் ஒருவரினால் அல்லது செயலாளரினால் விடுக்கப்படலாம்.

(2) மேலே (1) ஆம் உபவாசகத்திற்கமைய அடகு வர்த்தகம் ஒன்றை ஒப்படைப்பதற்காக வேண்டுகோள் ஒன்று இறைவரி ஆணையாளர் அவர்களுக்கு கிடைக்கப்பெற்ற தினம் முதல் பஞ்சாங்க மாதங்கள் 03 இற்குள் தனது தீர்மானங்களை அந்நபருக்கு எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும்.

வர்த்தகத்தை முடித்துவிடல்.

48. (1) அடகு வர்த்தகம் செய்யும் ஒரு நபர் அவ்வர்த்தகத்தை முடித்துவிட எண்ணுவாராயின் மாகாண இறைவரி ஆணையாளர் அவர்களுக்கு மூன்று மாதங்களுக்கு முன் எழுத்துமூலமான வேண்டுகோள் ஒன்றை விடுத்தல் வேண்டும்.

(2) (1) ஆம் வாசகத்திற்கமைய யாதாயினும் ஒரு நபர் மாகாண இறைவரி ஆணையாளரிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்தால் அத்தினத்திலிருந்து 07 நாட்களுக்குள் தனது வர்த்தகத்தை முடித்துவிடுவதாக உரிய அந்நபருடைய பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம், அடகு வர்த்தக அனுமதிப்பத்திர இலக்கங்களுடன் பொது அறிவித்தல் ஒன்றை வர்த்தக நிலையத்தின் முன்பாகவும், தினசரி வெளிவரும் பத்திரிகைகளில் மும்மொழிகளிலும் பிரசித்தப்படுத்தல் வேண்டும்.

(அ) வர்த்தகத்தை மூடிவிடுவதாக எழுத்துமூல வேண்டுகோள் ஒன்று கிடைக்கப்பெற்றால் மாகாண இறைவரி ஆணையாளர் அவர்கள் கடிதம் கிடைத்து 07 நாட்களுக்குள் -

(i) அவ்வர்த்தகத்தின் அடகுபிடித்தல் நடவடிக்கைகளை நிலையான தினம் ஒன்று முதல் நிறுத்துமாறும் ;

(ii) அடகுபிடிப்பவருக்கு எதிராக எவ்வித முறைப்பாடுகளும் இல்லையென வர்த்தக நிலையம் அமைந்துள்ள பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடமும், அந்நபர் நிரந்தரமாக வதியும் பிரதேச பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடமும் உறுதியொன்றைப் பெற்றுச் சமர்ப்பிக்குமாறும் ;

(iii) அடகு வைப்பவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குகள் ஒன்றும் இல்லையென சத்தியக்கடதாசி ஒன்று சமர்ப்பிக்குமாறும் ;

(iv) விடுவிப்பதற்கு உள்ள சகலவிதமான அடமானங்கள் பற்றி தேவைப்படும் ஏனைய விபரங்களை சமர்பிக்குமாறும் ;

(v) இறுதி அடமானம் விடுவிக்கப்படும் திகதிவரையில் வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என சத்தியக் கடதாசி ஒன்று சமர்ப்பிக்குமாறும் ;

அடகுபிடிப்பவருக்கு எழுத்துமூலம் அறிவித்தல் ஒன்று விடுக்கப்படல் வேண்டும்.

(ஆ) இவ்வாசகத்தின் கீழ் இறைவரி ஆணையாளர் அவர்களிடம் வேண்டுகோள் ஒன்றை விடுப்பதற்குக் கட்டுப்பட்டுள்ள யாராவது ஒரு நபர் உடல், உள ரீதியில் பாதிக்கப்பட்டிருப்பாராயின், அவ்வர்த்தகம் தனியாளுக்குச் சொந்தமான வர்த்தகமாயின் அவ்வேண்டுகோளை அவருடைய அதிகாரங்களைப் பெற்ற ஒரு பிரதிநிதி மூலம் விடுக்கப்படலாம். கூட்டு வியாபாரம் என்றால் அவ்வேண்டுகோளை ஏனைய பணிப்பாளர் ஒருவர் அல்லது செயலாளர் மூலம் விடுக்கப்படலாம்.

(3) மேலே (1) ஆம் வாசகத்தின் கீழ் அடகு வர்த்தகம் ஒன்றை மூடிவிடுவதற்காக வேண்டுகோள் ஒன்று இறைவரி ஆணையாளருக்கு கிடைக்கப்பெற்ற நாள் முதல் பஞ்சாங்க மாதம் மூன்றிற்குள் தனது தீர்மானங்களை உரிய அந்நபருக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்படல் வேண்டும்.

49. (1) இந்நியதிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் ஒன்றின் கீழ் அடகு வர்த்தகம் செய்த ஒரு நபர் இறக்கும் பட்சத்தில், அவர் மரணிப்பதற்கு முன்னர் இருந்த கால எல்லைக்குள் அந்நபர் வாழ்ந்திருந்தால், அவரால் செலுத்தப்பட வேண்டியிருந்த கட்டணங்கள் அனைத்தும் சொத்துப் பரிபாலகர், ஒப்படையாளரினால் செலுத்தப்படல் வேண்டும். இந்நியதிச் சட்டத்தின் கீழ் வகை சொல்லப்பட வேண்டிய சகலவிதமான செயற்பாடுகள், காரணிகள் தொடர்பாக சொத்துப் பரிபாலகர், ஒப்படையாளர் வகைகூற கட்டுப்பட்டுள்ளார்; எனினும், வர்த்தகத்தின் உரிமையாளர் மரணித்தல்.

(அ) மரணித்த நபரது ஏதாவதொரு செயற்பாடொன்று, தவறுதலொன்று தொடர்பாக சொத்துப் பரிபாலகருக்கு, ஒப்படையாளருக்கு எதிராக எவ்வித வழக்குகளும் தாக்கல் செய்யப்படக்கூடாது;

(ஆ) அந்நபருடைய மரணம் சம்பவித்த தினத்திற்கு முன் உள்ள காலங்கள் தொடர்பாக, அவரிடம் அறவிடவுள்ள ஏதாவதொரு பணம் தொடர்பாக அவர் மரணித்த நாள் முதல் மூன்றாண்டுகள் கடந்த பின்னர் அப்பணத்தைச் செலுத்துமாறு சொத்துப் பரிபாலகருக்கு, ஒப்படையாளருக்கு சாட்டப்படலாகாது.

(இ) இவ்வாசகத்தின் கீழ் சொத்துப் பரிபாலகருடைய, ஒப்படையாளருடைய பொறுப்புக்களாவன -

(i) இந்நியதிச் சட்டத்தின்கீழ் ஏதாவதொரு ஈடுபாட்டுப் பொறுப்பொன்று ஏற்படும் சமயத்தில் சொத்துப் பரிபாலகர், ஒப்படைக்காரருக்கு அவ் அறிவித்தல் வழங்கப்படவேண்டிய திகதியாகும் போது அவரது உடைமையில் அல்லது அவரது கட்டுப்பாட்டில் நிலவி வந்த இறந்த நபருடைய சொத்துக்கும் ;

(ii) பொருள் பெறுபவருடைய கைக்குக் கிடைத்திருக்கக்கூடிய அச்சொத்தின் ஏதாவதொரு பங்கின் அளவிற்கு எல்லையாகுதல் வேண்டும்.

*அத்தியாயம் X*

## கட்டளையிடுதல்

கட்டளையிடுதல்.

50. (1) இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்குரிய கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் தொடர்பாக அமைச்சர் அவர்களினால் காலத்திற்குக்காலம் கட்டளைகள் ஏற்படுத்தப்படலாம்.

(அ) 8 (3) ஆம் உபவாசகத்தின் கீழ் அடகு வர்த்தகம் ஒன்றை நடாத்துவதற்காக பதிவு செய்யப்படும் கட்டணங்கள் ;

(ஆ) 10 (2) ஆம் உபவாசகத்தின் கீழ் அடகு அனுமதிப்பத்திரம் ஒன்றுக்கு அறவிடப்பட வேண்டிய வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணமும் அனுமதிப்பத்திரதாரியினால் வைப்புச் செய்யப்பட வேண்டிய பிணைப் பணமும், பிணைப்பணம் வைப்புச் செய்யப்பட வேண்டிய விதங்களும்.

(2) (1) ஆம் உபவாசகதின் கீழ் விதிக்கப்படும் சகல விதிகளும் அவை வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினம் முதல் அல்லது அவ்விதிமுறையில் நிச்சயிக்கப்பட்டு குறிப்பிடப்படக்கூடிய பிறிதொரு தினத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்படுவதுடன், அது வர்த்தமானியில் குறித்தொதுக்கப்பட்ட தினம் முதல் இயன்றவரை விரைவாக குறித்தொதுக்கப்பட்ட பிரேரணையாக மாகாண சபைக்கு முற்படுத்தப்படல் வேண்டும்.

(3) மாகாண சபையினால் அனுமதிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள மறுக்கப்பட்ட விதிமுறை ஒன்று மறுத்தளிக்கப்படும் "தினம் வரை" அவ்விதிமுறையின் செல்லுபடிக்கு கேடுகள் ஏற்படாத விதத்தில் மறுத்தளிக்கப்பட்ட தினம் முதல் பதிலீடு செய்யப்பட்டுள்ளதாக கணிக்கப்பட வேண்டியதுடன், அவ்விதிமுறைகளுள் ஏதாவது ஒரு தினத்தில் பதிலீடு செய்யப்பட்டதாக கவனத்திற் கொள்ளப்படுமானால் அத்தினம் பற்றிய அறிவித்தல் ஒன்று வர்த்தமானியில் பிரசுரிக்கப்படல் வேண்டும்.

*அத்தியாயம் XI*

## நிலுவைப் பணத்தை அறவிடுதல்

51. (1) இவ் அத்தியாயத்தின் பணிகளுக்காக "நிலுவைப் பணம்" ; என்பது, அடகுபிடிப்பவரினால் வழங்கப்பட வேண்டிய பிணைப்பணம் ஒன்றாகவோ அல்லது 8 (4), 5 ஆம் உபவாசகத்தின் கீழ் ஏதாவதொரு தாமதக் கட்டணம் அல்லது 10 (3), 28 (1), (2) ஆம் உப வாசகங்களினதும் 31 ஆம் வாசகத்தின் கீழ் அறவிடப்படவேண்டிய ஏதாவதொரு பணமாகக் கொள்ளப்படும்.

(2) (1) ஆம் உபவாசகத்தின் கீழ் அறவிட வேண்டிய ஏதாவதொரு பாக்கிப் பணம் அறிவித்தலில் நிச்சயிக்கப்பட்டுள்ள திகதிக்கு முன் செலுத்தப்படல் வேண்டுமென அடகுபிடிப்பவருக்கு பதிவுத் தபால் மூலம் இறைவரி ஆணையாளரினால் அறிவிக்கப்படல் வேண்டும். அவ்வாறு செலுத்தப்படாது ஏதாவதொரு பணத்தை மீறப்பட்ட பணமாகக் கருதி அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(3) (அ) (2) ஆம் உபவாசகத்தின் கீழ் ஏதாவது பணமொன்றைச் செலுத்தாமல் மீறப்பட்ட சமயத்தில் இங்கு இதற்குக் கீழ் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள ஏதாவதொரு விதத்தில் அதனை அறவிட்டுக் கொள்வதற்கு முன் இறைவரி ஆணையாளர் அவர்களினால்,

(i) பாக்கிப் பணம் பற்றிய விவரங்கள் :

(ii) பாக்கிப் பணத்தை அறவிடுவதற்கு செயற்படுவதாக குறிப்பிட்டு மீறப்பட்ட நபருக்கு கடிதமொன்றை அல்லது அறிவித்தலொன்றை பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

(ஆ) மேலே 3 (அ) உபவாசகத்தின் கீழ் இறைவரி ஆணையாளர் அவர்களினால் அனுப்பப்பட்ட அறிவித்தலொன்று அந்நபருக்கு கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து 02 வாரத்திற்குள் அது பற்றிய ஏதாவதொரு எதிர்ப்பொன்றை அந்நபரினால் விடுக்கப்படலாம். ஆணையாளர் அவர்களை அவ் எதிர்ப்புகளை தமது கவனத்திற் கொண்டு அதற்குரிய தீர்மானங்களை அறிவித்தல் வேண்டும். அத்தீர்மானம் இறுதியானதும் தீர்வான தீர்மானமுமாகும்.

52. (1) இந்நியதிச் சட்டத்தின் கீழ் அறவிடப்பட வேண்டிய பாக்கிப் பணத்தை அறவிடுவதற்காக இறைவரி ஆணையாளர் அவர்களினால் பாக்கிப் பணங்களைச் செலுத்துவதற்கு மறுத்துள்ள நபருடைய பெயரை அவர் இறுதியாக வாழ்ந்த இடத்தைச் சுட்டிக்காட்டும் உறுதிகளுடன் அப்பிரதேசத்திற்குட்பட்ட விடய சட்ட அறிவித்தல்களைக் கொண்ட நீதவான் முன்னிலையில் அந்நபரை நிறுத்தச் செய்யலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் நீதிபதி அவர்களால் அந்நபரினால் மறுக்கப்பட்ட பாக்கிப் பணத்தை அறவிடுவதற்காக, மறுக்கப்பட்ட, நபருக்கு எதிராக மேலதிக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளாமல் இருப்பதற்கு போதிய காரணங்கள் இருப்பின் அவ்விடயங்களை தனக்குப் பகர்வதற்காக தன்னிடம் அழைக்கப்படல் வேண்டும். அவரினால் போதிய காரணங்கள் சுட்டிக்காட்டப்படாவிட்டால் மறுக்கப்பட்டுள்ள பாக்கிப் பணத்திற்கு தண்டனை ஒன்றினால் மட்டும் தண்டிக்கப்படலாம் அல்லது சிறையில் இட்டு தண்டிக்கப்படலாம் அல்லது செய்த குற்றத்திற்கு சிறைத்தண்டனை விதிக்கப்படாமல் நீதிபதி அவர்களினால், நிச்சயிக்கப்பட்ட தண்டனை வேறு ஒன்றினால் விதிக்கப்பட்டவைகளும் தண்டனை ஒன்றாவதுடன், அக்குற்றத்திற்குரிய தண்டனை மறுத்ததினால் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் சட்டக்கோவை மசோதாவில் 291 ஆம் வாசகத்தின் 1 ஆம் உபவாசக நடைமுறைகளின் அ, ஆ பந்தியினைத் தவிர்ந்த தண்டனையாக அமையும்.

(2) இறைவரி ஆணையாளர் அவர்களினால் 1 ஆம் உபவாசக பணிகளுக்கென வழங்கப்பட்டுள்ள ஏதாவதொரு வெளிப்பாட்டின் சரியானவைகள் பற்றிய விபரங்களை வழங்கும் போது நீதிபதி அவர்களினால் வினவப்படலாகாது. இதற்கமைய இச்சான்றிதழில் உள்ள வெளிப்பாட்டின் பிழையற்றவைகள் கவனத்திற் கொள்ளப்படல் அல்லது தீர்மானித்தல் போன்றவை நீதிபதி அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அவ் உபவாசகத்திற்கு அமைய கருதப்படலாகாது.

(3) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் வழக்குச் சட்டக்கோவை மசோதாவின் 291 ஆம் வாசகம் (2) முதல் (5) வரையிலான உபவாசக ஏற்பாடுகள் எவையும் இவ்வாசகத்துடன் 1 ஆம் உபவாசகத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சந்தர்ப்பங்களுக்கு பொருத்தமுடையதாகாது.

(4) 1 ஆம் உபவாசகத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவற்றை மறுத்துள்ள நபருக்கு நிச்சயிக்கப்பட்டதும், அவ் உபவாசகத்தின் தண்டனையைச் செலுத்தாமல் மறுக்கப்பட்டதும், மறுத்த நபரை சிறைவாசகத்திற்கு ஆளாக்கப்பட்டதுமான ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் நீதவான் அவர்களினால் தண்டப் பணத்தைச் செலுத்த காலங்களை விதித்தல் அல்லது அதனைத் தவணை அடிப்படையில் செலுத்த கட்டளையிடலாம்.

(5) 1 ஆம் உபவாசகத்தினால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள விதத்தில் காரணங்களைச் சுட்டிக்காட்டுவதற்காக அவ் உபவாசகத்தின் கீழ் காலம் வழங்குதல் அல்லது 4 ஆம் உபவாசகத்தின் கீழ் தண்டனை வழங்க காலம் வழங்குவதற்கு முன்நிபந்தனைகளாகப் பிணை வைப்பதற்கு மறுத்துள்ள நபர்களுக்குக் கட்டளையிடும் சந்தர்ப்பத்தில் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் வழக்குக் கட்டளைக் கோவை மசோதாவின் XXXIV ஆவது அத்தியாய ஏற்பாடுகள் தொடர்புடையதாகும்.

(6) பணம் பகுதி பகுதியாக கட்டப்படலாம் என நீதிபதி அவர்களினால் 4 ஆம் உபவாசகத்திற்கு அமைய கட்டளையிடப்பட்டிருக்கும் போது அவற்றில் ஏதாவதொரு பங்கினைக் கட்ட மறுத்திருக்கும் சந்தர்ப்பத்தில், மீதியாகவுள்ள சகல பங்குகளும் கட்டப்படவில்லை என்ற எண்ணத்துடன் வழக்குகளை ஆரம்பிக்கலாம்.

(7) 1 ஆம் உபவாசகத்திற்கமைய ஏதாவதொரு வழக்குக் கடமைகளின் பொழுது உத்தரவாதக் கட்டணத்தைக் கட்டுமாறு யதார்த்தமாக நிச்சயிக்கப்பட்டிருக்கும் பொழுது, அது மறுக்கப்பட்டதற்கான போதிய சாட்சியாவதுடன், கட்டணத்தொகை அதிகம் அல்லது பிழையானது அல்லது அதற்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது எனக் கூறப்படும் எவ்வாறான உத்தரவாதங்களும் ஏற்றுக்கொள்ளப்படலாகாது.

53. ஏதாவதொரு பாக்கிப் பணத்தைக் கட்டுவதற்கு மறுக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்திலும் 52 ஆம் உபவாசகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விதத்திலும், அப்பாக்கிப் பணத்தை அறவிடுதல் நடைமுறையில் பொருத்தமற்றதாகும் என ஆணையாளர் கருதும் பட்சத்தில் அப்பாக்கிப் பணம் பற்றிய விபரங்கள், அப்பாக்கிப் பணம் செலுத்தவேண்டிய நபருடைய அல்லது நபர்களுடைய பெயர்களடங்கிய உறுதியொன்றை அவ்வாறு மறுத்துள்ளவர் வதிவுடன் வசிக்கும் அல்லது அவருடைய அசைவுள்ள, அசைவற்ற சொத்துக்கள்

நிலைபெற்றுள்ளவரின் விவரங்களை அப்பிரதேச நீதிமன்றத்தில் வைக்கப்பட்டதும் சட்ட அதிகாரமுடையதுமான மாவட்ட நீதிமன்றம் ஒன்றுக்கு வழங்குவதற்கு இயலுமாவதுடன், அவ்வாறான சமயங்களில் பாக்கிக் கட்டணத்தை அறவிட்டுக் கொள்வதற்காகத் தேவைப்படும் சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு மறுக்கப்பட்ட நபரின் அசைவுள்ள, அசைவற்ற சொத்துக்கள் எல்லாவற்றையும் அல்லது அதன் ஒரு பகுதியை கடைகளுக்குள் வைக்கப்பட்டு விற்பனை செய்யும்படி "பிஸ்கல்" உத்தியோகத்தருக்கு அதிகாரம் வழங்கி, காணி விற்பதற்குரிய நீதிமன்றக் கட்டளை ஒன்றை வழங்கும்படி அந்நீதிமன்றம் கட்டளையிடுதல் வேண்டும். குற்றவியல் சட்டக்கோவையின் 226 முதல் 297 வரையிலான வாசக ஏற்பாடுகளுக்கமைய தேவைப்படும் மாற்றங்களுடன் அவ்வாறான தடையொன்றை பெற்றுக்கொள்வதற்கு விற்பனைக்குத் தொடர்புடையதாகும்.

இவ்வாசகத்துடன் பணிகளின் பொழுது அசைவுச் சொத்துக்கள் என்பதற்குப் பொறித் தொகுதிகளும், இயந்திர உபகரணங்களும் அடங்கும்.

*அத்தியாயம் XII*

**பொது ஏற்பாடுகள்**

தகவல் பெற்றுக் கொள்ளும் அதிகாரம்.

54. (1) இந்நியதிச் சட்ட பணிகளின் பொழுது இறைவரி ஆணையாளரினால் யாதேனும் ஒரு நபருக்கு எழுத்துமூல அறிவித்தல் ஊடாக நிச்சயிக்கப்பட்டு,

(i) புத்தகங்கள், பத்திரிகைகள், கணக்குகள், வர்த்தகப் பட்டியல்கள், தொகைப்பட்டியல்கள், ஆவணங்கள், கொடுப்பனவுப் படிவங்கள், காசோலைகள், அடகுச் சீட்டுக்கள், அடமானப் புத்தகங்கள், கணக்காய்வு அறிக்கைகள் அல்லது அந்நபருடைய உடனடியில் உள்ளதும் அறிவித்தலில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதுமான ஆவணங்களை நிச்சயிக்கப்பட்டுள்ள கால எல்லைக்குள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் ;

(ii) ஏதாவதொரு தகவலை வழங்கும்படி ;

(iii) ஏதாவதொரு தகவல் அல்லது விடயங்கள் பற்றி பரீட்சிப்பதற்காக ஏதாவது ஒரு இடத்திற்கு அங்கு குறிப்பிடப்பட்டுள்ள திகதி, நேரத்திற்கு தான் அல்லது தனது அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் ஊடாக சமுகம் தரும்படி நிச்சயிக்கப்படலாம்.

(2) ஏதாவது தகவலொன்றை வழங்கும்படி நிச்சயிக்கப்பட்டு மேலே (i), (ii), (iii) வாசகத்தில் உள்ள யாரேனும் நபருக்கு அறிவித்தல் ஒன்றை வழங்கும் சந்தர்ப்பத்தில் தொடர்பான தகவல்கள் வழங்குதல் வேறு நியதிகளுக்கு முரணாகத் தென்பட்டாலும் அவற்றை கருத்திற் கொள்ளாமல் அந்நபர், நியதிகளுக்கு அமைவுற செயற்படல் வேண்டும்.

(3) மேலே (1) ஆம் உபவாசகத்தின் கீழ் இறைவரி ஆணையாளர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அல்லது சமர்ப்பிக்கப்பட்டிருந்த அல்லது வேறொரு விதத்தில் தனக்கு உரிமையாக்கப்படும் அல்லது உரிமையாக்கப்பட்டிருக்கும் ஏதாவதொரு புத்தகம், கணக்குகள், வர்த்தகப் பட்டியல்கள், தொகைப்பட்டியல்கள், பதிவேடுகள், கொடுப்பனவுப் படிவங்கள், காசோலைகள், அடகுச் சீட்டுக்கள், அடமானப் புத்தகங்கள், கணக்காய்வு அறிக்கைகள் அல்லது வேறு ஆவணங்கள் இந்நியதிச் சட்டப் பணிகளுக்கு தனது பொறுப்பில் ஒருசில காலங்கள் தடுத்து வைத்துக் கொள்வதற்குத் தேவைப்படுமாயின் அக்காலங்களில் தனது பொறுப்பில் தடுத்து வைத்துக் கொள்ளலாம்.

(4) தபாலில் அனுப்பப்பட்டுள்ள யாதாவதொரு அறிவித்தல் ஒப்படைக்கப்பட்டுள்ள தினம் முதல் 03 தினங்கள் முடிவுற்ற திகதியில் அவை ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கவனிக்கப்படல் வேண்டும்.

வழக்குத் தாக்கல் செய்தல்.

55. இந்நியதிச் சட்டத்தின் கீழ் ஏதாவதொரு குற்றத்திற்கு வழக்கொன்று தாக்கல் செய்வதானால் இறைவரி ஆணையாளர் அவர்களின் அனுமதியின்றி தாக்கல் செய்தலாகாது.

மாதிரிப் படிவங்கள் தயாரிக்கப் படல்.

56. இந்நியதிச்சட்டப் பணிகளை நிறைவேற்றும் போது பயன்படுத்தப்படவேண்டிய மாதிரிப் படிவங்கள் இறைவரி ஆணையாளர் அவர்களினால் காலத்திற்குக் காலம் குறித்தொதுக்கப்படலாம். அவ்வாறு குறித்தொதுக்கப்பட்ட யாதாவதொரு மாதிரிப்படிவம் அல்லது ஆவணங்கள் காலத்திற்குக் காலம் திருத்தப்படல் அல்லது மாற்றுதல் அல்லது குறித்தொதுக்கப்பட்ட ஏதாவதொரு மாதிரிப்படிவம் அல்லது ஆவணங்களுக்குப் பதிலாக வேறு மாதிரிப்படிவங்கள், ஆவணங்களை பதிலீடு செய்வது ஆணையாளர் அவர்களினால் மேற்கொள்ளப்படலாம்.

57. இந்நியதிச் சட்டத்தின் கீழ் தன்னுடைய பணிகளை நிறைவேற்றிக் கொள்வதைத் தவிர்ந்து இந்நியதிச் சட்டத்தின் கீழ் நியமனம் செய்யப்பட்டதாகக் கணிக்கப்படும் சகல ஆட்களும் அல்லது இந்நியதிச் சட்ட ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக அல்லது இயக்குவதற்காக யாதாவது நபரொருவருக்கு உதவுவதற்காக அல்லது சேவையில் ஈடுபாடு கொள்ளச் செய்யப்பட்டுள்ள அல்லது ஈடுபாடு கொண்டுள்ள எந்தவொரு நபரும் இந்நியதிச் சட்டத்தின் கீழ் தன்னுடைய பணிகளை நிறைவேற்றும் பொழுது யாதாவதொரு நபருடைய செயற்பாடுகள், நடத்தைகள் பற்றி தனக்கு அறிந்து கொள்வதற்கு கிடைக்கும் சகல காரணங்கள் தொடர்பாகவும் இரகசியத் தன்மைகளைப் பேணிப் பாதுகாத்துக் கொள்வதற்கான ஒத்துழைப்புக்களும் வழங்கப்பட வேண்டும். மேலும், அக்காரணிகள் யாருக்குப் பொருத்தமுடையதாகுமோ அந்நபருக்கு அல்லது அவருடைய அதிகாரங்களைப் பெற்றுக்கொண்டுள்ள பிரதிநிதிக்கு, அமைச்சர் அவர்களுக்கு அல்லது நிதி அமைச்சின் செயலாளர் அவர்களுக்கு, அவருடைய அதிகாரங்களைப் பெற்றுக் கொண்டுள்ள நபரொருவரைத் தவிர்ந்த யாருக்கும் எவ்விதத்திலான காரணங்களையும் காட்டப்படலாகாது என்பதுடன் இறைவரி ஆணையாளர் அவர்களது உரிமைப் பொறுப்பிலுள்ள, கட்டுப்பாட்டிலுள்ள எந்தவொரு ஆவணத்தையும் பெற்றுக்கொள்வதற்கு எந்தவொரு நபருக்கும் இடமளிக்கப்பட அனுமதியளிக்கப்படலாகாது. உத்தியோக இரகசியங்கள்.

58. பொருள் அடகுபிடிப்பவரினால் நிறைவேற்றப்படல் வேண்டுமென இந்நியதிச் சட்டத்தினால் நிச்சயிக்கப்பட்டுள்ள அல்லது இந்நியதிச் சட்டத்தினை அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அல்லது எவ்விதத்திலானதொன்றையும் பொருள் அடகுபிடிப்பவருடைய அனுமதிப்படி அவருடைய ஊழியர் அல்லது பிரதிநிதிகளால் நிறைவேற்றப்படலாம்.

59. இந்நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்கள், செயற்பாடுகள், பணிகள் போன்ற எதனையும் இறைவரி ஆணையாளர் அவர்களுடைய கையொப்பத்தின் கீழ், எழுத்துமூல அதிகாரம் வழங்கப்பட்டுள்ள பிரதி ஆணையாளர், மதிப்பீட்டாளர், அரச உத்தியோகத்தர் ஒருவரினால் நிறைவேற்றப்படல் அல்லது நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். இந்நியதிச் சட்டத்திற்கு அமைய இறைவரி ஆணையாளர் அவர்களினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள், செயற்பாடுகள், பணிகள் போன்றவற்றை இறைவரி ஆணையாளர் அவர்களினால் தன்வசம் மீண்டும் பெற்றுக் கொள்ளப்படலாம். நியதிச்சட்ட அதிகாரங்களை மீளப்பெறுதல்.

60. பொருள் அடகுபிடிக்கும் வர்த்தகத்தை நடாத்திச் செல்வதற்கான அனுமதிப்பத்திரம் ஒன்றை யாதாவது ஒரு நபருக்கு வழங்குவதற்கான காரியங்களுக்காக அல்லது இந்நியதிச்சட்டத்திற்குக் கீழான ஏதாவது குற்றமொன்று தொடர்பாக யாராவது ஒரு நபருக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கொன்றின் பொழுது அந்நபர் இலங்கைப் பிரசை ஒருவர் என்பதாகவோ அல்லது வெளிநாட்டுக் கம்பனியொன்று அல்லது வெளிநாட்டு வர்த்தக நிறுவனமொன்று அல்ல என்பதனை நிரூபிக்கும் நம்பிக்கைப் பொறுப்புக்கள் அந்நபருக்கே ஒப்படைக்கப்பட்டுள்ளது. நிரூபிக்கும் நம்பிக்கைப் பொறுப்புக்கள்.

61. ஏதாவதொரு பொருளை ஏதாவதொரு நிபந்தனையின் அடிப்படையின் பின்னர் விடுவித்துக் கொள்ளப்படுமென அல்லது விலைக்கு வாங்கப்படுமென அல்லது அவ்வாறு வெளியிடப்பட்ட அல்லது மறைமுகமான உடன்பாடொன்று அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்று உண்டு என நியாயபூர்வமாக ஏற்றுக்கொண்டு அதற்கமைய பொருட்களை விலைக்கு வாங்குதல் அல்லது விற்பனை செய்தல் அல்லது அதற்கான கொடுக்கல் வாங்கல்களின் பொழுது முற்பணத்திற்குப் பிணையாகப் பொருட்களை வைத்துக்கொள்வதற்காக கடையொன்றை நடாத்திச் செல்லும், பொருட்கள் விலைக்கு வாங்கப்பட்டு அல்லது பொறுப்பேற்று அல்லது வைத்துக்கொண்டு அதற்காக ஏதாவதொரு பணத்தை வழங்கும் அல்லது முற்பணமாக வழங்கும் அல்லது கடனாக வழங்கும் சகல நபர்களும் பொருள் அடகுபிடிக்கப்படும் வர்த்தகமொன்றை செய்பவராக இந்நியதிச்சட்ட பணிகளின் பொழுது கவனிக்கப்படல் வேண்டும். மேலும், அச்சகல விதமான கொடுக்கல் வாங்கல்களும் பொருளொன்று, கட்டணம் செலுத்துதலொன்று, முற்பணமொன்று, கடனொன்று இந்நியதிச் சட்டத்திற்குள் முறையே அடகொன்று, அடமானமொன்று, கடனொன்று என கவனிக்கப்படல் வேண்டும். ஒருசில கடைக் காரர்கள் பொருள் அடகுபிடிப்பாளர் களாக கணித்தல்.

62. இந்த நியதிச் சட்டத்தில் ஏதும் முரணாகக் குறிக்கப்பட்டிருப்பின்,

(அ) அடகுக் கட்டளைச் சட்டத்தின் (99 ஆவது அதிகாரமான) கீழ் மத்திய மாகாணத்துக்குள் வழங்கப்பட்டுள்ள ஏதும் அனுமதிப்பத்திரம் எனக் கருதுதல் வேண்டும் ;

(ஆ) குறித்த கட்டளைச் சட்டத்தின் கீழ் யாக்கப்பட்ட கட்டளைகளை நீக்கிவிட்டு இந்த நியதிச் சட்டத்தின் கீழ் யாக்கப்பட்ட கட்டளைகளைப் பதிலீடாக ஆக்கப்படும்வரை குறித்த கட்டளைகள் இந்த நியதிச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட கட்டளையாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(இ) கட்டளைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டு உரிய தினத்துக்கு முதல் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட ஏதும் வழக்குகள் மற்றும் அவ்வாறான வழக்கில் நீதிமன்றம் வழங்கும் ஏதும் தீர்ப்பின் போது இந்த நியதிச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கெனவும், இந்த நியதிச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பாகவும் கருதப்படுதல் வேண்டும்.

*அத்தியாயம் XIII*

**பொருள் கோடல்**

63. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாக தேவைப்படுத்தினாலன்றி,

"ஆளுநர்" என்பது, மத்திய மாகாண ஆளுநர் அவர்களைக் குறிக்கும்.

"அமைச்சர்" என்பது, மத்திய மாகாண சபையின் நிதி விடயப்பொறுப்பு அமைச்சரைக் குறிக்கும்.

"பிரதம செயலாளர்" என்பது, மத்திய மாகாணத்தின் பிரதம செயலாளரைக் குறிக்கும்.

"மத்திய மாகாண இறைவரி ஆணையாளர்" என்பது, இந்நியதிச் சட்டப் பணிகளுக்காக நியமிக்கப்பட்ட மத்திய மாகாண இறைவரி ஆணையாளர் என்ற பொருள்படுவதுடன் 1990 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மத்திய மாகாணத்தின் நிதி நியதிச் சட்டத்திலுள்ள பொருளையே குறிக்கும்.

"பொலிஸ் உத்தியோகத்தர்" என்பது, வர்த்தகம் அமைந்துள்ள பிரதேசத்திற்கு உட்பட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பாளர் என்று பொருள்படும்.

"பிரதி ஆணையாளர்" என்பது, 1990 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மத்திய மாகாண நிதிச் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொருளையே குறிக்கும்.

"கணிப்பீட்டாளர்" என்பது, 1990 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மத்திய மாகாண நிதிச் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொருளையே குறிக்கும்.

"வெளிநாட்டுக் கம்பனி" என்பது, இலங்கைக்கு அப்பால் யாக்க நிறுவனமாக்கப்பட்ட ஏதாவதொரு கம்பனி அல்லது தனியாள் சபையொன்று என்று பொருள்படுவதுடன் அதனூடாக உரிய தினத்திற்குப் பின்னர் இலங்கைக்குள் வர்த்தக இடமொன்றை அமைத்து அல்லது (ஆ) உரிய தினத்திற்கு முன் இலங்கைக்குள் வர்த்தக நிலையமொன்றை அமைத்து உரிய தினத்தில் இலங்கைக்குள் வர்த்தக நிலையமொன்றை தொடர்ந்து நடாத்திச் செல்லும், ஏதாவதொரு கம்பனி அல்லது தனியாள் சபையொன்று எனப் பொருள்படும்.

"குறிக்கப்பட்ட தினம்" என்பது, இந்நியதிச்சட்டத்தில் வினைப்படுத்தப்பட்ட தினம் என்று பொருள்படும்.

"இலங்கைப் பிரசை" என்பது, பிறப்பில் அல்லது செல்லுபடியாகும் ஏதாவதொரு நீதிபதியின் கீழ் இலங்கைப் பிரசை ஒருவராகும் யாராவது ஒரு நபர் என்று பொருள்படும்.

"மாவட்டம்" என்பது, நிர்வாக மாவட்டம் என்று பொருள்படும்.

"வெளிநாட்டு வர்த்தக நிறுவனம் ஒன்று" என்பது,

(i) பங்குதாரர்கள் இருவரைக் கொண்ட வர்த்தகம் ஒன்றாகும் பொழுது, அவர்களுள் ஒரு பங்குதாரர் அல்லது இரண்டு பங்குதாரர்களும் இலங்கைப் பிரசை அல்லாதவர் ; அல்லது

(ii) பங்குதாரர்கள் இருவருக்கு மேற்பட்ட தொகையினரைக் கொண்ட வர்த்தகமாகும் போது அவர்களுள் ஆகக் குறைந்தபட்சம் ஒரு பங்காளர் இலங்கைப் பிரசை அல்லாதவரான வர்த்தகமொன்று என்று பொருள்படும்.

"மாதம்" என்பது, இலாபம் அல்லது வட்டி அறவிடுவதற்கான பணியாகும் பொழுது 30 நாட்களுடைய கால எல்லை ஒன்று என்று பொருள்படும்.

"பஞ்சாங்க வருடம்" என்பது, சகல விடயங்களிலும் சனவரி மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியில் முடிவடையும் காலத்தொகை என்று பொருள்படும்.

"நிதியாண்டு" என்பது, சகல வருடங்களிலும் ஏப்பிறல் மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பித்து அண்மிக்கும் வருடத்தின் மாச்சு மாதம் 31 ஆந் திகதி முடிவுறும் கால எல்லை என்று பொருள்படும்.

"நபர்" என்பது, யாராவது ஒருவர், தனியாள் குழுவொன்று, கம்பனியொன்று அல்லது திணைக்களமொன்று என்று பொருள்படும்.

"அடகுவைப்பவர்" என்பது, அடகுவைப்பதற்கென ஏதாவது ஒரு பொருளை அடகுபிடிப்பவர் ஒருவரிடம் வழங்கும் ஒருவர் என்று பொருள்படும்.

"அடமானம்" என்பது, பொருள் அடகுபிடிப்பவர் ஒருவரிடம் அடகுவைக்கப்பட்ட பொருள் என்று பொருள்படும்.

"மாகாண சபை" என்பது, மத்திய மாகாண சபை என்று பொருள்படும்.

"மாகாணசபை நிதியம்" என்பது, 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபை மசோதாவின் 19 ஆம் வாசகத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள மத்திய மாகாணத்தின் மாகாண சபை நிதியம் என்ற பொருள்படும்.

"வர்த்தக நிலையம்" என்பது, வதிவிடம் ஒன்று, பண்டகசாலையொன்று, கடையொன்று, கம்பனியொன்று, கூட்டு வர்த்தகமொன்று, இணைந்த வர்த்தமொன்று, வர்த்தக நடவடிக்கைகள் செய்யப்படும் எந்தவொரு விதத்திலான கடையொன்று, மேற்குறிப்பிடப்பட்டவைகளின் கிளை ஒன்றாக நடாத்திச் செல்லப்படும் எந்தவொரு இடமும் என்று பொருள்படும்.

"பூர்த்தியுறாத பொருள் அல்லது பொருட்கள்" என்பது, பொருள் அல்லது திரவியங்கள் ஏதாவதொன்று உற்பத்தி நிலைக்கு அல்லது உற்பத்திச் செயற்பாடுகளுக்கு ஆக்கிக் கொள்ளப்பட்டதன் பின்னர் பொருள் அல்லது திரவியங்கள் ஏதாவதொன்று அல்லது அவற்றைப் பயன்படுத்தி உற்பத்திச் செயற்பாடொன்றுக்கு அல்லது செயற்பாடுகளுக்கு ஆக்கிக் கொள்ளப்பட்டதன் பின்னரும் வரைதல் அல்லது நுகர்தல்களுக்காக முடித்துவிட நேர்த்தியாக்குவதற்கு முன்னர் அப்பொருளை, திரவியங்களை கலப்புச் செய்து அல்லது தனித்தனியாக ஏதாவதொரு உற்பத்தி நிலையில் இருக்கின்றதா அல்லது ஏதாவதொரு உற்பத்தியின் ஒரு பகுதியாக அல்லது பிரிவாக உற்பத்தி செய்வதற்கென தெளிவாக ஊகிக்கப்பட்டுள்ள மேற்கூறப்பட்டவைகளில் ஏதாவதொன்று என்று பொருள்படும்.

"சொத்துப் பரிபாலகர்" என்பது, இறந்துபோன ஒருவருடைய சொத்துப் பரிபாலகர் ஒருவர் அல்லது உரிமைத்துவம் உடையவர் ஒருவர் என்ற பொருள்படுவதுடன், அதன் கீழ் குறிப்பிடப்படும் ஆட்கள் உட்படுவர். இறந்தவர் ஒருவருடைய சொத்துக்களின் உரிமைகளை பொறுப்பேற்கும் என்பது, சொத்துக்களைப் பரிபாலிக்கும் ஒரு நபர், அல்லது

(ஆ) இறந்து போனவருடைய சொத்து தொடர்பாக உயில் சாசனத்தின் உண்மை நிரூபிக்கப்பட்ட உரிமைத்துவ அதிகாரப்பத்திரங்கள் வழங்கும்படி அல்லது மீண்டும் முத்திரையிடுவதற்கு அல்லது மாவட்ட நீதிமன்றத்தினால் வேண்டுகோள் விடுக்கப்பட்ட அவ்வாறு கேட்பதற்கு உரிமைகளையுடைய நபரொருவர் என்று ; அல்லது

(இ) நம்பிக்கைப் பொறுப்பாளரின் இறுதி விருப்பப்பத்திரங்களுக்குக் கீழ் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்புக் கொடுத்தல்களுக்கும் கீழ் செயற்படும் பொறுப்பாளியுடையோர் என்று பொருள்படும்.

"தற்காலிக இணைப்பாளி" என்பது, பிறிதொரு யாதாவதொரு நபருக்காக ஏதாவதொரு வர்த்தகத்தை இயக்கும், நடத்தும் அல்லது முகாமைத்துவங்களுக்கு பொறுப்பாகச் செயற்படும் யாதாவதொருவர் என்று பொருள்படும்.

"அதிகாரம் பெற்ற முகவர்" என்பது, இந்நியதிச்சட்டத்தின் செயற்பாடுகளுக்காக யாராவது ஒருவர் சார்பில் செயற்படுவதற்காக எழுத்துமூலம் அதிகாரங்கள் வழங்கப்பட்டதும்.

(அ) தனிநபர் ஒருவர் தொடர்பானால் அப்பொழுது அவ்வாறான ஒருவருடைய உறவினர் ஒருவர் ஆகும்;

(ஆ) பங்கு வர்த்தகமாகும் பொழுது அப்பங்கு வர்த்தகத்துடன் பங்காளரொருவராகும் ;

(இ) கம்பனியொன்றாகும் பொழுது அக்கம்பனியின் பணிப்பாளர் ஒருவர் அல்லது செயலாளர் ஒருவராகும் ;

(ஈ) தனியாள் சபையொன்றாகும் பொழுது தனியாள் சபையின் அங்கத்துவரொருவராகும் ;

(உ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் அங்கத்தவரொருவராகும் ;

(ஊ) சட்டத்தரணியாகும் நபரொருவர் என்று பொருள்படும் ;

"பதிவு செய்யப்பட்ட வங்கியொன்று" என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிகளுக்கான மசோதாவின் அர்த்தத்தை வெளிப்படுத்தி அனுமதிப்பத்திரங்களையுடைய வர்த்தக வங்கி ஒன்று என்று பொருள்படும்.

64. இந்நியதிச் சட்டத்தின் சிங்கள, தமிழ், ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

(4-ஆம் வாசகம்).

## முதலாம் அட்டவணை

படிவம் "அ"

### அனுமதிப்பத்திரம்

இலக்கம் :..................................................

மத்திய மாகாண இறைவரி ஆணையாளர் ..........................................................................................................
ஆகிய பெயரையுடைய நான் மத்திய மாகாண சபையின் எல்லைக்குள்..........................................................................
இடத்தில் அமைந்துள்ள.............................................................................................. எனும் வர்த்தக நாமத்தின் கீழ்,
பொருள் அடகுபிடிப்பதற்கான வர்த்தக நிலையம் ஒன்றை நடாத்திச் செல்வதற்காக...................................................
.............................................................................................................. வதியும்.........................................
.......................................................................................................... அவர்களுக்கு, மத்திய மாகாண சபையின்
இலக்கம் :....................................................................................................... உடைய பொருள் அடகுபிடிப்பாளர்
களுடைய நியதிச்சட்ட நடைமுறைகளுக்கேற்ப இதற்கு அதிகாரங்கள் வழங்கி அனுமதிப்பத்திரம் வழங்குகின்றேன்.

...............................................................
மாகாண இறைவரி ஆணையாளர்,
மத்திய மாகாணம்
(உத்தியோகபூர்வ முத்திரை)

திகதி :..............................

(19 ஆம் வாசகம்).

படிவம் "ஆ"

### அடமானப் புத்தகம்

..................................................................... இடத்தில் பொருள் அடகுபிடிப்பவரான
.....................................................................
அடமானப் புத்தகம்

| அடகுத் துண்டு இலக்கம் அது வழங்கப் பட்ட திகதி | மாதத்தின் அடமான இலக்கம் | ஒவ்வொரு பொருளுக் கும் வழங் கப்பட்ட கடன் தொகை | ஒவ்வொரு பொருளுக் கும் அற விடப்பட்ட இலாபம் அல்லது வட்டி | அடகு வைப்பவ ரின்பெயர் | அடகு வைப் பவரின் முகவரி | அடகு வைப் பவர் உரி மையாளர் அல்லாத சமயங்க ளில் உரி மையாளர் பெயர் | அடகு வைக்கப் பட்டுள்ள ஒவ்வொரு பொரு ளின் விபரம் | அடகு வைக்கப் பட்டவை தங்க ஆப ரணங்கள் எனின் அதன் பாரம் | அடகு வைக்கப் பட்ட ஒவ்வொரு பொருளி னதும் பெறுமதி | விடுத்துக் கொள்ளப் படும் திகதி | விடுக்கப் படுபவரின் பெயர், முகவரி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ. ச. | ரூ. ச. | | | | | | | | |

(19 ஆம் வாசகம்).

படிவம் "இ"

**அடமான விற்பனைப் புத்தகம்**

விற்பனை செய்யப்பட்ட இடம், திகதி :

.............................................................................................................

ஏல விற்பனையாளர் பெயர், முகவரி :

.............................................................................................................

| அடமானப் புத்தகத்தில் சுட்டிக் காட்டப்படும் விதத்தில் அடமானத்தின் இலக்கம் | அடகுவைக்கப் பட்ட திகதி | அடகுவைத்த வருடைய பெயர் | கடன் தொகை | அறவிடப்பட வேண்டிய வட்டித் தொகை | ஏலவிற்பனை யாளரினால் ஒவ்வொரு அடமானங் களும் விற்பனை செய்யப்பட்ட பணம் | விலைக்கு வாங்கிய நபரின் பெயர், முகவரி |
|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | |

(20 ஆம் வாசகம்).

படிவம் "ஈ"

**அடகுத் துண்டு**

உபபட்டியல் இல. ......................

பொருள் அடகுபிடிப்பவர் வசம்
வைத்துக் கொள்ளப்படல் வேண்டும்
திகதி :..............................................
பொருள் அடகுபிடிப்பாளர் பெயர்,
முகவரி :..........................................................................
.....................................................................................
இலக்கம் : ................................................ உரிய
தேசிய அடையாள /கடவுச்சீட்டு உடைய இங்கு கீழ்
கையொப்பம் இடப்படும் (அடகுபிடிப்பாளர் முகவரி)
.....................................................................................
வதியும்..........................................................................
ஆகிய நான், மேற்குறிப்பிடப்பட்ட அடகு வைப்பவரிடம்
ரூபா.......................................................... பெறுமதியான
ரூபா..........................................................விற்கு இன்று
நான் அடகு வைத்தேன்.

.....................................................................
கையொப்பம்,
(முத்திரை).

மூலப்பிரதி இல. ..........................
திகதி :....................................
.........................................................................................
(அடகு வைப்பவருடைய பெயர், முகவரி)
அவர்களால் இங்கு கீழ் கையொப்பம் இடப்படும்
.........................................................................................
.........................................................................................
பொருள் (அடகு வைப்பவரின் பெயர், முகவரி) :
.........................................................................................
இற்கு ரூபா ........................................ இற்கு இன்று அடகு
வைக்கப்பட்டது.
பொருள் அடகுபிடிப்பவர் அல்லது அவருடைய பிரதிநிதி
அல்லது ஊழியர்.

பெயர்:...................................................................
கையொப்பம் :.............................................................

கையொப்பமிட இயலாத பட்சத்தில் அவருடைய இடது கை
பெருவிரல் அடையாளம்.

(24 ஆம் வாசகம்).

படிவம் "உ"

**அடகு வைப்பவரின் கையொப்பத்தால் பிரதி செய்யப்படாத, அடகுச் சீட்டொன்றின் மூலப்படிவம்
24 ஆம் வாசகத்தின் கீழ் ஒப்படைக்கப்படும் பொழுது செய்யப்படவேண்டிய வெளிப்பாடு**

கீழே விபரிக்கப்பட்டுள்ள பொருட்கள்/பொருள் ........................................................................ வரால் பொருள் அடகு பிடிப்பவர் ஒருவரான .................................................................................................. உடைய கடையில் அடகுவைக்கப்பட்டது எனவும், அதற்கான அடகுச் சீட்டின் மூலப்பிரதியை பெற்றுக் கொண்டுள்ளதாகவும், அந்த........................................................ அடகு வைத்தவர் இறந்து விட்டமையால்/ .................................................................................... காரணமாக ஏற்பட்டுள்ள சுய இயலாமை நிலையில் இருக்கின்றமையால், அவ் அடமானத்தை விடுவித்துக் கொள்வதற்காக அந்த ஈட்டை பிடித்தவரின் கையொப்பம் மூலம், அடகுச் சீட்டின் மூலப்பிரதியை கையொப்பமிடச் செய்து கொண்டு சமர்ப்பிப்பதற்கு இயலாதுள்ளது எனவும் ........................................ இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை/கடவுப்பத்திரமுடைய............................................... வதிவிட (A B)............................................ ................................................................................................. ஆகிய நான் பொருள் அடகுபிடிப்பவர்களுக்கான நியதிச்சட்ட ஏற்பாடுகளுக்கமைய கம்பீரமாகவும் நேர்மையாகவும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

(A B) கையொப்பம் : ...................................................................

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பொருள்/பொருட்கள் :................................................................................ ஆகும்.
இதனை வெளிப்படுத்தும் மேற்குறிப்பிடப்பட்ட நபர் ........................................................................... இடத்தில் ........................................................................................ (A B) நபர் என்பதனை நானறிவேன்..................................................
(C D) ஆகிய நான் அந்த நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய காம்பீரத்துடன் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

(C D) கையொப்பம் :...........................................................

20........................... ஆம் ஆண்டு ............................ மாதம் ......................... ஆந் திகதி என் முன்னிலையில் வெளிப்படுத்தி உறுதிப்படுத்தப்பட்டு கையொப்பமிடப்பட்டது.

........................................................
சமாதான நீதவான்,
(முத்திரை).

(26 ஆம் வாசகம்).

படிவம் "ஊ"

**அடகுச் சீட்டின் மூலப்பிரதி காணாமல் போன சந்தர்ப்பங்களில் வெளியிடப்பட வேண்டிய வெளிப்பாடுகள்**

(இவ்வெளிப்பாடு பொய்யானதொன்றாக ஆக்கப்பட்டால், இவ்வெளிப்பாடுகளை வெளியிட்டவருக்கு தண்டனைகள் அனுபவிக்க நேரிடலாம் என்பதனைக் கவனத்திற் கொள்க)

அடகுபிடிப்பவராகிய ....................................................................................... உடைய கடையில் கீழ் விபரிக்கப்படும் பொருள்/ பொருட்கள்................................................................................................ அவர்களால் அடகுவைக்கப்பட்டது எனவும், அதற்கான அடகுச்சீட்டின் மூலப்படிவம் பெற்றுக்கொள்ளப்பட்டதாகவும், அம்மூலப்படிவம் பின்னர் ................................................ அவர்களால் ................................................................... எனவும் மூலப்படிவம்................................................... வரால்................................................................. அல்லது இல்லையெனவும் .......................................... இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை/ கடவுச்சீட்டுடைய ........................................................................................ வதிவிட (A B)............................................................... ஆகிய நான், பொருள் அடகுபிடிப்பவருடைய நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய கம்பீரமாகவும், நேர்மையாகவும் உண்மையென உறுதிப்படுத்துகின்றேன்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பொருள் அல்லது பொருட்கள் பற்றிய விபரங்கள் கீழே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

(A B யுடைய) யையொப்பம் ..............................................................................................................
இங்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள வெளிப்பாடுகளைச் செய்த நபர் .................................................. இல் (A B)........................................................................ பெயருடைய நபர் என்பதை நானறிவேன் என (C D)...................................................................... ஆகிய நான், நியதிச்சட்ட நடைமுறைகளுக்கேற்ப கம்பீரமாகவும் நேர்மையாகவும் உண்மையென உறுதிப்படுத்துகின்றேன்.

(C D யுடைய) கையொப்பம் :..............................................................................................

20.......................... ஆம் ஆண்டு ................................ மாதம் ............................ ஆந் திகதி எனது முன்னிலையில் வெளிப்படுத்தப்பட்டது என கையொப்பமிடுகின்றேன்.

.....................................................

சமாதான நீதவான்/சத்திய ஆணையாளர்,
(முத்திரை).

(31 ஆம் வாசகம்)

படிவம் "எ"

**பற்றுச்சீட்டு**

திகதி :..........................................................................

இலக்கம் : .............................................. உடைய அடமானத்தை விடுவித்தல் மூலம் பெறப்பட்டது.

| | ரூ. ச. | ரூ. ச. |
|---|---|---|
| கடன் பணம் | ........................................ | ........................... |
| இலாபம் அல்லது வட்டி | ........................................ | ........................... |
| வர்த்தக மொத்த விற்பனை வரி | ........................................ | ........................... |

..............................................................................
அடகுபிடிப்பவரது கையொப்பம்.

(20 ஆம் வாசகம்)

**இரண்டாம் அட்டவணை**

**வட்டி விகிதம் :**

வட்டிக்கு வழங்கப்படும் சகல தொகைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கும் வட்டி விகிதம் சகல மாதங்களுக்கும் அல்லது மாதத்தின் ஒரு பகுதிக்கும் 2 சதமாகும்.

**வட்டி செலுத்துதல் :**

அடமானத்தின் பேரில் வழங்கப்படும் கடனொன்றுக்காக பொருள் அடகுபிடிப்பவரினால் எழுத்துமூல சட்டங்களுக்கு அமைய ஏதாவதொரு வரி வழங்கப்பட வேண்டிய சந்தர்ப்பங்களில், அவ்வரியை அடகுபிடிப்பவரினால் அவரிடம் அறவிடப்படலாம்.

**அதிகமாக வட்டி அறவிடுதலை கட்டுப்படுத்தல் :**

ஏதாவதொரு நாள் முதல் அதிகமான வட்டியொன்றை அறவிடுவதற்கு அடகுபிடிப்பவருக்கு உரிமையுள்ள சந்தர்ப்பமொன்றில் அத்திகதிக்கு முன் அடகுப்பொருளை விடுவித்துக் கொள்வதற்கு தனக்கு விடுவித்துக்கொள்ள இயலாமைக்கான காரணம், அதற்கு முன்னைய தினம் முற்பகல் 8.00 மணி முதல் பிற்பகல் 8.00 மணிவரையிலான கால எல்லைக்குள் அவ்வடகு பிடிப்பவரின் கடை மூடியிருந்தமையே என சட்ட அதிகாரமுடைய பொருத்தமான நீதிமன்றமொன்று திருப்தியடையும் விதத்தில் அடகு வைப்பவரினால் ஒப்புவிக்கப்பட்டால் அவ்வாறான அதிக வட்டியொன்றை அறவிட்டுக் கொள்வதற்கு அடகுபிடிப்பவர்களுக்கு உரிமைகள் இல்லை.

அந்த அடகுச் சீட்டுக்குரிய அடமானங்களை அடகுவைக்கப்பட்ட தினத்திலிருந்து 12 மாதகால எல்லைக்குள் பாதுகாத்துக்கொள்வதற்கு இயலாது போனால் அவ் அடமானத்தை பிரசித்த ஏலவிற்பனையில் விற்கப்படலாம்.

அவ்வாறு விற்கப்பட்ட பொழுது ஏதாவதொரு மேலதிக இலாபம் கிடைத்தால் அதனை அவ்வாறு விற்ற தினம் முதல் ஓராண்டு காலத்திற்குள் அடகு வைத்தவரினால் கேட்கப்படாது விடின் அம்மேலதிக இலாபத்தை அவ் அடகு வைத்தவருடைய வரவில் ஓராண்டு காலம் மாகாண சபையின் நிதியில் வைப்புச் செய்யப்படல் வேண்டும்.

(32 ஆம் வாசகம்)

## மூன்றாம் அட்டவணை

அடமானங்களை ஏலவிற்பனை செய்வதற்குரிய கட்டளைகள்

1. ஏலவிற்பனை செய்யப்படும் சகல அடமானங்களும் பொதுமக்களினால் பார்வையிடக்கூடிய விதத்தில் ஏல விற்பனையாளரினால் திறந்து வைத்தல் வேண்டும்.

2. அடமானம் தொடர்புடைய கீழ்வரும் விடயங்கள் அடங்கிய பெயர்ப்பட்டியல் ஒன்று ஏல விற்பனையாளரினால் பிரசித்தப்படுத்தப்படல் வேண்டும்.

   (அ) பொருள் அடகுபிடிப்பவரின் பெயர், வர்த்தக இடம் ;

   (ஆ) அந்த அடமானம் அடகு வைக்கப்பட்ட மாதம் ;

   (இ) ஒவ்வொரு அடமானமும் அடகு வைக்கப்பட்ட சமயத்தில் அடமானப் புத்தகத்தில் சேர்க்கப்பட்ட விதத்தில் ஒவ்வொரு அடமானத்தின் இலக்கம் :

3. ஒவ்வொரு அடகுபிடிப்பவரிடமும் இருந்த அடமானங்கள் அந்தந்த பெயர்ப்பட்டியலில் வேறு யாராவது ஒரு பொருள் அடகுபிடிப்பவர்களினால் பிரித்து வைக்கப்படல் வேண்டும்.

4. விற்றல் தொடர்புடைய அறிவித்தல்கள் ஒரு சிங்கள, தமிழ், ஆங்கில பத்திரிகைகளிலாவது அறிவித்தலாக வெளிப்படுத்தப்படுவதுடன், விற்பனை செய்யப்படும் பிரதேசத்தில் பொதுமக்கள் பார்வையிடும் வண்ணம் அறிவித்தல்கள் காட்சிப்படுத்தப்படல் வேண்டும். மேலும் அவ் அறிவித்தல்களில் கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

   (அ) பொருள் அடகுபிடிப்பவரின் பெயர், முகவரி :

   (ஆ) அவ் அடமானம் அடகு வைக்கப்பட்ட மாதம் :

5. அவ் அறிவித்தல்கள் ஒரே பத்திரிகையில் இரண்டு நாட்கள் வெளியிடப்படுவதுடன், இரண்டாம் நாள் அறிவித்தல் குறைந்தபட்சம் விற்பனை செய்வதற்குரிய தினத்திற்கு தெளிவான 10 நாட்களுக்கு முன்னராகும்.

6. விற்பனை செய்யப்படும் பொழுது அடகுபிடிப்பவர் விற்பனை விலைகூறும் சந்தர்ப்பத்தில் ஏனைய நபர்களினால் வைக்கப்படும் விலைகூறல்களைவிட வேறு விதத்தில் விலைகூறல்களைச் செய்ய ஏல விற்பனையாளர் கவனத்திற் கொள்ளல் கூடாது. ஏதாவதொரு பொருளை அடகுபிடிப்பவர் விலைக்கு வாங்கினால் அப்பொருளை விலைக்கு வாங்கிய நபராகக் கணித்து அவ் அடகுபிடிப்பவரின் பெயரை ஏல விற்பனையாளர் உடனடியாக சப்தமிட்டுக் கூறுதல் வேண்டும்.

7. அவ்விற்பனையின் 14 நாட்களுக்குள் பெயர்ப்பட்டியலின் ஒரு பிரதியை அல்லது அப்பொருள் அடகுபிடிப்பவருடைய அடமானங்களுக்குரிய அப்பெயர்பட்டியல் பகுதியின் பிரதியொன்றை அவ் அடகுபிடிப்பவருடைய அடமானங்கள் விற்கப்பட்ட பணத்தொகையையும் சுட்டிக்காட்டி ஏல விற்பனையாளரின் கையொப்பத்தையும் இட்டு அதனை உறுதிப்படுத்தி பொருள் அடகு வைத்தவருக்கு ஏலவிற்பனையாளரினால் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

8. பொருள் அடகுபிடிப்பவர் அந்த ஏல விற்பனையின் பின் குறைந்தபட்சம் இரண்டு வருட காலங்களுக்கேனும் அச்சகல பெயர்பட்டியல்களையும் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.

7 - 615

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.